ISSN 1391-9504




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சின்னாபின்னமான கோரிக்கை

நாட்டின் சகல இடங்களும் மன்னனுக்கே சொந்தம் என்பதை ஒல்லாந்தருக்கு காட்டுவதற்கு நிலமேக்கள் பெருமுயற்சி எடுத்தனர். அது மாத்திரமல்ல; ஒல்லாந்தர் வர்த்தக சங்கத்தில் உள்ளோர் மன்னனின் சேவையாளர்களே என்பதை உறுதிப்படுத்த அவர்கள் முயற்சித்தனர்.

இதற்கிடையில், ஹென்றிக் அட்ரியன் வேன் ரீத் எனும் ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடத்தும் நோக்குடன் மன்னனின் அனுமதியோ, அறிவுறுத்தலோ இல்லாமல் பீல் நாகபட்டிணம் சென்றார்.

எனினும், அவருக்கு உடனடியாக மீண்டும் திரும்பி வரும்படி செய்தி அனுப்பப்பட்டது. மத்தன்கொட செட்டி மூலமே இச்செய்தி அனுப்பப்பட்டது. அத்தகையதோர் கோரிக்கை அடங்கிய செய்தியை கண்டியின் மகா நிலமேயும் எடுத்துக்கொண்டு கொழும்பிற்கு வந்தான். இரண்டாம் இராஜசிங்க மன்னனுடன் சமாதானம் அடைவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாகபட்டிணம் சென்ற பீல் அவர்களை மீண்டும் திருப்பி அழைத்தது. அறிவானதொரு செயல் என கொழும்பு ஆணையாளர் எண்ணினார். மீண்டும் மன்னனுக்கு நிலங்களைக் கையளித்தால் கறுவா வர்த்தகத்தின் ஏகபோக உரிமையை இழக்க வேண்டி வரும் என அவர் நினைத்தார். எது எப்படி நடந்தேறினாலும் கோட்டையை கையளிக்க ஒல்லாந்தரின் இரு பிரதானிகளும் விரும்பவில்லை. இதற்கிடையில், வேறு பல ஒல்லாந்த தலைவர்களும் நிலவுரிமையை மன்னனுக்குக் கையளிப்பது குறித்து தமது தீவிர எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அவர்கள் அந்த நிலங்களை போர்த்துக்கேயரிடம் இருந்து தாம் பெற்றுக்கொண்டதாலேயே இவ்வாறு எதிர்த்தனர். இந்த நிலங்களில் போர்த்துக்கேயர் மிக நீண்டகாலமாக பல்வேறு பலன்களை அனுபவித்தனர். அதனால், இந்நிலங்கள் மீது உண்மையான உரிமை எமக்கே உண்டென்றும் மன்னனுக்கு அல்லவென்றும் அவர்கள் வாதாடினர்.

இதற்கிடையில், மட்டக்களப்பைக் கைப்பற்றி தக்க வைத்துக்கொள்வது ஒல்லாந்தருக்கு ஓரளவு சிரமமான காரியமாகவே இருந்தது. எனினும், அதனைக் கைவிட்டால் அதனை அந்நிய இனத்தவர் கைப்பற்றிவிடுவர் என்ற பயமும் அவர்களுக்கு இருந்தது. அதனால், எத்தகைய இன்னல்கள் ஏற்பட்டாலும் மட்டக்களப்பைக் கைவிடுவதில்லை என அவர்கள் தீர்மானித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடநூல்களில் அடங்கியுள்ள விடயங்கள் வெப் தளத்தில் உள்ளடக்கப்படவுள்ளன

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## இலங்கையிலுள்ள பாடசாலைகள்

- மத்திய வங்கியின் அறிக்கையின்படி இலங்கையிலுள்ள மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கை-10,448
- இலங்கையிலுள்ள அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை-9,662
- இலங்கையிலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை-330
- அரசாங்க பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளின் எண்ணிக்கை-786
- இலங்கையிலுள்ள தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை-94
- நாடளாவிய ரீதியில் ஆசிரிய, ஆசிரியைகளின் எண்ணிக்கை-224,125

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்களில் அடங்கியிருக்கின்ற விடயங்களை வெப் தளத்தில் உள்ளடக்குவதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த வருடத்துக்கான சகல பாடநூல்களும் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. எனினும், யாரேனுமொரு மாணவருக்கு ஏதேனுமொரு பாடநூல் இதுவரையில் கிடைக்காமல் இருக்குமாயின், அதனை பெற்றுக் கொடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதுதவிர, பாடநூல்களில் அடங்கியுள்ள சகல விடயங்களையும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வெப் தளத்தில் உள்ளடக்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போதளவில் சில பாடநூல்களில் அடங்கியுள்ள விடயங்கள் வெப் தளத்தில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இவ் வருடம் நிறைவடைவதற்குள் 5,6,7ஆம் தரங்களுக்குரிய பாடநூல்கள் வெப்




தளத்தில் உள்ளடக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எவருக்கேனும் பாடநூல்களில் அடங்கியுள்ள விடயங்கள் குறித்து அறியவேண்டிய தேவை ஏற்படின், இந்த வெப் தளத்தினூடாக அறிந்துகொள்வதற்கான வாய்ப்புக் கிடைப்பதாகவும், வளர்ந்த நாடுகளில் பாடசாலை மாணவர்களின் உபயோகத்துக்காக வெப் தள முறை பின்பற்றப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சா/தரப் பரீட்சை பெறுபேறு மீள் ஆய்வுக்கான விண்ணப்பங்கள் 30 ஆம் திகதி வரை

2009, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் மீள் ஆய்வுக்கான விண்ணப்பங்கள் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை விண்ணப்பதாரிகளின் பரீட்சை பெறுபேறுகளின் மீள் ஆய்வுக்கான விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர் ஊடாகவும், வெளி விண்ணப்பதாரிகளின்



விண்ணப்பங்கள் தனித்தனியாகவும் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

சகல விண்ணப்பங்களும் த.பெ.1503, கொழும்பு என்ற முகவரிக்கு மாத்திரம் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும், கல்வி அமைச்சுக்கோ அல்லது அது தொடர்பான ஏனைய முகவரிகளுக்கோ அனுப்பி வைக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தொற்றுநோய் அல்லாத நோய்களால் நாளொன்றுக்கு 400 உயிரிழப்புகள்



தொற்றுநோய் அல்லாத வேறு நோய்கள் காரணமாக, இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் 400 பேரளவில் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் அல்லாத நோய்ப்பிரிவின் மருத்துவ நிபுணரான பாலித கருணாபேம தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அதிகமானோர் பாதிப்புக்குள்ளாகின்ற தொற்றுநோய் அல்லாத நோய்களாக நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் என்பன விளங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுகாதார அமைச்சின் புள்ளி விபரத்தின்படி, உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை 40 லட்சத்தையும் தாண்டியுள்ளது. நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 15 லட்சம் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

தொற்றுநோய் அல்லாத நோய்கள் ஏற்படுவதற்கு புகைபிடித்தல், மது அருந்துதல், சுறுசுறுப்பின்மை மற்றும் சிறந்த சுகாதாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் உணவுகளை உட்கொள்ளத் தவறுதல் என்பன பிரதான காரணங்களாக அமைவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அதிவேக டீசல் கார்

**சாலைகளில் அதிவேகமாகச் செல்லக்கூடியவாறான கார் ஒன்று விரைவில் பாவனைக்கு வரவுள்ளது. JCB Dieselmax எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தக் கார், டீசலை எரிபொருளாகக்**




கொண்டு இயங்குகின்ற, அனைத்து தரைவழி வாகனங்களைவிடவும் அதி வேகமாக பயணிக்கக்கூடியது.அதற்கேற்ப அதன் எஞ்சின் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிலாந்தின் JCB நிறுவனத்துக்காக Visioneering எனும் நிறுவனம் இதனை வடிவமைத்துள்ளது. ஒருவர் மட்டும் பயணம் செய்வதற்கு ஏற்ற இந்த கார், மணிக்கு 563 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடியது.

30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.
எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

## விவாத மேடை

### 'டியூஷன்' வகுப்புக்கள் அவசியமா? அவசியமற்றதா?

மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளுக்காக டியூஷன் வகுப்புக்களுக்குச் செல்வது அவசியமா? அவசியமற்றதா? நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? உங்கள் கருத்துக்களை சுருக்கமாக தபால் அட்டையில் மாத்திரம் எழுதி அனுப்புங்கள். முடிவுத் திகதி 28.04.2010

'விவாத மேடை',
ஆசிரியர்,
விஜய்
த.பெ.2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகப் பெண்களின் வாழ்வியலில் மாற்றம் ஏற்படுத்திய எமலின்



1858 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி இங்கிலாந்தின் மென்ஜெஸ்டர் நகரில் எமலின் பெங்ஹர்ஸ்ட் பிறந்தார். இவர் பெண்களின் உரிமைக்காக போராடத் தொடங்கும்பொழுது அவருக்கு வயது வெறும் எட்டு மாத்திரமே என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

"எமது காலத்துப் பெண்களின் வாழ்வியலை மாற்றி அமைத்தவர் எமலின் எனக் கூறினால் அது மிகையாகாது. அவர் முழு உலக சமூகத்தையும் தட்டிக்கேட்டு பெண்களை சமூகத்தில் உச்சநிலை அடையச் செய்வதில் வெற்றிகண்டார்" என 1999 ஆம் ஆண்டு உலகின் பிரபல பத்திரிகைகளில் ஒன்றான 'டைம்ஸ்' தகவல் வெளியிட்டிருந்தது. 21 ஆம் நூற்றாண்டில் உலகையே மாற்றியமைத்த, இருபதாம் நூற்றாண்டின் முக்கியமான மற்றும் உன்னதமான பெண்களில் சிலர் என விசேட மலரொன்றை வெளியிட்டு, அவர் குறித்து மேற்கண்டவாறு தெரிவித்திருந்தது.


ஆண்களுக்கு பெண்கள் சமமானவர்கள் என்று பெண்களின் நிலையை உயர்வடையச் செய்வதற்கு அவர் எடுத்த பெருமுயற்சிக்கும் அயராத உழைப்பிற்கும் முழு உலகப் பெண்களுமே எமலினுக்கு கடன்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும்.



அரசியல் பின்னணியுள்ள குடும்பத்தில் பிறந்த எமலின் தனது-20 ஆவது வயதிலேயே பெற்றோரால் திருமணம் முடித்து வைக்கப்பட்டார். அதன் பின் குழந்தைக்குத் தாயான பொழுதிலும் அவரின் தீராத சமூகப் பணிக்கு அது இடையூறாக இருக்கவில்லை. அவரின் தாய் சொபியா க்ரென், அரசாங்கத்தில் முக்கிய பின்னணியுள்ள ஒரு பெண்ணாவார். அவர் 1881 ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமையை பெற்றுக்கொடுத்தார். அவரின் தந்தையார் மென்ஜெஸ்டர் நகரின் பிரபல வர்த்தகராகத் திகழ்ந்ததோடு, பின்னர் செல்போட் நகரின் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

எமலின் பத்துப் பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் பெண்களில் மூத்தவர் ஆவார். இத்தகைய பின்னணியிலேயே அவர் பெண்களின் உரிமைக்காகப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

1878 ஆம் ஆண்டு எமலின் சட்டத்தரணியான ரிச்சர்ட் பெங்க்ஹர்ஸ்ட்டை என்பவரை திருமணம் முடித்தார். அவரும் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கவேண்டும் என்ற போராட்டத்தில் அவரின் மனைவியுடன் இணைந்து தீவிரமாகப் போராடினார். எமலினுக்கு ஐந்து பிள்ளைகள் பிறந்தன. அவரின் மகள்மார்களாகிய கிரிஸ்டபல், எடேலா, சில்வியா ஆகியோரும் தாயுடன் இணைந்து பெண்களின் உரிமைகளுக்காகப் போராடினர்.



பெண்களுக்கான உரிமைகளிலேயே மிக முக்கியமான உரிமையாக அவர்கள் கருதியது வாக்குரிமை ஆகும். ஏனெனில், அக்காலத்தில் ஆண்களுக்கு மாத்திரமே வாக்குரிமை இருந்தது. பெண்களுக்கு வாக்குரிமை இருக்கவில்லை. பெண்களுக்கு வாக்குரிமை பெறுவதற்காக அமைதியான முறையில் போராடி எவ்வித பயனுமில்லை என்பதை உணர்ந்த எமலின் இப்போராட்டத்தின் நிமித்தம் பெண்களை வீதியில் இறக்கவும் துணிந்தார். ஒருமுறை இங்கிலாந்தின் நாடாளுமன்றத்தை சுற்றி வளைத்தார். வீதியில் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் இறுதியில் வன்முறையில் முடிந்தது. கட்டடங்களுக்கும் ஜன்னல்களுக்கும் சேதம் விளைவித்தது. பொலிஸாரைத் தாக்கியதாலும் எமலினின் பெண்கள் அமைப்பிற்கெதிராக குற்றஞ்சாட்டப்பட்டது. இதனால், எமலினுக்கும் அவரின் மகள்மார் இருவருக்கும் அடிக்கடி சிறை செல்ல நேரிட்டது. சிறைவாசம் மிகவும் துயரம் நிறைந்ததாகவும் சிறைக்கூடங்கள் மிக மோசமான நிலையிலும் இருந்தன. இதனால், அதன் நிலையை உயர்த்தும் பொருட்டு சிறைக்கூடத்தினுள்ளேயே உண்ணாவிரதம் இருந்தார். ஆணாதிக்கத்திற்கெதிராக அவர் மேற்கொண்ட பற்பல தீவிரப் போராட்டங்களை ஆண்களின் தலைமைகளால் பின்னர் நிராகரிக்கவோ, உதாசீனப் படுத்தவோ முடியாமல் போனது.

முதலாம் உலகப்போரின் போது, ஜேர்மனி பிரித்தானியா மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பு முயற்சியை முறியடிக்கும்வகையில் பிரித்தானிய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும்பொருட்டு எமலினும் அவரின் மூத்த மகளாகிய கிறிஸ்டபலும் தமது போராட்டங்களை தற்காலிகமாக ஒத்தி வைத்தனர்.

அதுமாத்திரமல்ல; தொழிற்சாலைகளில் பெண்கள் சிறந்த ஒத்துழைப்புகளை வழங்க வேண்டுமென்றும் இளைஞர்கள் யுத்த நடவடிக்கைகளில் இணைந்து பூரண ஒத்துழைப்புகளை நல்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

1918 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட 'மக்களின் பங்குபற்றுதல்' எனும் சட்டத்தின்படி 30 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் சகலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. அதுவரை பெண்களின் சமவுடமை மற்றும் அரசியல் சங்கம் எனும் அமைப்பு தமது அன்றாட வாழ்வில் பெண்கள் சமவுரிமை பெற்று வாழ தம்மை அர்ப்பணித்துக்கொண்ட மகளிர் கட்சியாகப் பரிணமித்தது.

1928 ஆம் ஆண்டு எமலின் காலமானார். அப்பொழுது உலகெங்கும் பெண்களின் நிலைமை பெரும்பாலும் முன்னேற்றம் நிறைந்த மாற்றத்தை எட்டியிருந்தது. அவர் இறந்து இரண்டு ஆண்டுகள் கழிந்தபின் அவரின் உருவச்சிலை திறக்கப்பட்டது. அவரைக் கௌரவிக்க அமைக்கப்பட்ட அந்த சிலையை இன்றும்கூட இங்கிலாந்தின் விக்டோரியா கோபுரப் பூங்காவில் காணலாம். (அ)

# மண்பானையிலிருந்து இனிய இசை

பானைகள், தண்ணீர் பிடித்து வைப்பதற்கும் உணவு சமைப்பதற்கும் ஏற்றவை. விநோதமான உருவம் கொண்ட சில பானைகள், சிலவகைப் பொருட்களைப் பாதுகாத்து வைக்கவும் உதவுகின்றன.



ஆனால், பானையிலிருந்து இனிய இசையும் பிறக்கின்றது. 'பாண்டவடயா' எனப்படும் பானை, வடஇந்தியாவில் நாட்டுப்புற இசையில் இசைக்கருவியாக நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

காஷ்மீரில் இந்த இசைக்கருவி 'நூட்', 'ரவுப்' என்று அழைக்கப்படுகிறது. ராஜஸ்தான் மக்கள் இதை 'மட்கி' என்கிறார்கள். இவையெல்லாம் களிமண்ணால் தயாரிக்கப்படுகின்றன.

'பானைகள்' கச்சேரி வரை வந்திருக்கின்றன. இப்பானை 'கடம்' என்றழைக்கப்படுகிறது. அதற்கு சமஸ்கிருத மொழியில் 'மண் பானை' என்று அர்த்தம். தட்டி ஒலி எழுப்பப்படும் இந்தக் கருவி மிருதங்கத்துக்கு ஒரு நல்ல பக்கத் துணையாகிறது. கர்நாடக இசையில் இது ஒரு மிகவும் முக்கியமான இசைக்கருவி ஆகும்.

கடம் கலைஞர் அவ்வப்போது ஒரு கையால் வாய்ப்பகுதியை மூடித் திறந்து, ஒலி வித்தியாசத்தை ஏற்படுத்துவார். ஒரு கையால் கடத்தின் வாயை மூடும் அதேநேரம், மறுகையால் தட்டி இசையை உருவாக்குவார். கடம் வாசிப்பதில் விரல்களுக்கே வேலை அதிகம்.



ஒருவரால் தொடர்ச்சியாக கடம் வாசிக்க முடியாது. அது விரல்களுக்குக் கஷ்டத்தை ஏற்படுத்தும். அதனால்தானோ என்னவோ, ஏனைய தட்டும் இசைக்கருவிகள் போல கடம் பிரபலமாகவில்லை. ஆனாலும், கடம் ரசிகர்களும் புகழ் பெற்ற கடம் இசைக்கலைஞர்களும் அதிகளவில் இருக்கின்றனர். கைதேர்ந்த கடம் இசைக்கலைஞர்கள், ஒரு மண் பானையில் இருந்துகூட உயிரை ஊடுருவும் இசையைப் பிறக்க வைக்கமுடியும் என்று நிரூபித்துக் கூடியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம்மிடம் திறமைகள் இருப்பது போலவே பலவீனங்களும் இருக்கின்றன. எனினும், திறமைகளைப் பற்றி சிந்திக்காமல் சதா பலவீனங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தால் வாழ்க்கை தோல்வியிலேயே முடிவடையும். எனவே, வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமாயின் பலவீனங்களை ஒழித்து, திறமைகளை வளர்த்துக்கொள்வது அவசியம். அதற்கு உதவும் பல்வேறு விடயங்களை இக்கட்டுரையில் ஆராய்வோம்.**



# பலவீனங்களைப் போக்கி திறமைகளை வளர்ப்போம்

## தன்னைப் பற்றிய புரிந்துணர்வு

பலவீனங்களை ஒழித்து திறன்களை வளர்த்துக்கொள்வதாயின் தம்மிடம் மறைந்து கிடக்கும் திறன்கள் எவை? என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அதற்காக முதலில் தன்னைப் பற்றி நன்கு அறிந்துகொள்வது அவசியம். அதனை நாம் 'சுயபுரிந்துணர்வு' என அழைக்கின்றோம். சுயபுரிந்துணர்வை பெறுவதற்காக சுய மதிப்பீடு (தன்னைப் பற்றித் தானே மதிப்பீடு செய்தல்) செய்யவேண்டும். சிறுவயது முதல் தன்னுள் இருந்த விசேட திறமைகள் எவை என்பதை நினைவுகூரல், போட்டிகளில் பங்குபற்றியதால் தான் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்களையும் பரிசில்களையும் பார்த்தல், பெற்றோர்களும் ஆசிரியர்களும் நண்பர்களும் தனது திறமைகளைப் பாராட்டிய சந்தர்ப்பங்களை நினைவுகூரல் போன்றவற்றினூடாக தன்னுள் இருக்கும் திறன்களை அடையாளம் காண வாய்ப்புக் கிடைக்கிறது.



## தன்னம்பிக்கை

உண்மையான திறமைசாலியாக வர வேண்டுமென்றால் தன்னிடத்தில் உள்ள திறன்களை வளர்த்தெடுக்க வேண்டும். அதற்காக தன்னம்பிக்கையை கட்டியெழுப்புவது முதலாவது படிமுறையாகும். சாதனை மிகுந்த வாழ்க்கைக்கு தன்னம்பிக்கை மிகப்பெரிய உந்து சக்தியாகும்.

உதாரணமாக, "எனக்குப் படிக்க முடியாது", "எனக்கு கணிதம் செய்யமுடியாது" போன்ற நம்பிக்கையற்ற சிந்தனைகளை மனதில் ஏற்படுத்திக் கொண்டால் மனம் பலவீனமடையும். அதனால், எப்பொழுதும் 'என்னால் முடியும்' என்ற தன்னம்பிக்கையுடன் எதையும் எதிர்கொள்ளுங்கள். இதனால், உங்கள் அடிமனது நிமிடத்திற்கு நிமிடம் மாபெரும் பலத்தை நோக்கி வீறுநடை போடும். அதுவே வெற்றிக்கு வழிவகுக்கும்.




## சுய மதிப்பீடு

சிலர் மற்றவர்களைவிட தான் உயர்ந்தவன் என்று இறுமாப்புக் கொள்வதுண்டு. வேறு சிலரோ ஏனையவர்களைவிட தான் தாழ்ந்தவன் என்ற தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திக்கொள்வர். இறுமாப்பும் தாழ்வு மனப்பான்மையும் உங்களின் இயல்பான திறன்களை வளர்த்துக் கொள்வதற்குப் பெரும் தடையாக இருக்கும். எனவே, உங்கள் திறமைகளை சரிவர சுய மதிப்பீடு செய்துகொள்வதன் மூலம் திறமைகளை மேலும் மேலும் வளர்த்துக்கொள்ளலாம்.

## தீர்மானம்

தன்னம்பிக்கையுடன் கைகோர்த்துச் செல்லக்கூடிய மற்றொரு சக்திதான் தீர்மானம் எடுக்கும் மனநிலை. குறித்த ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு எமக்கு உந்துசக்தியாக இருப்பது ஏதாவதொன்றில் எமக்கு இருக்கும் தீராத ஆசையாகும். குறித்த ஒரு விடயத்தில் எமக்கேற்படும் அதிக ஆசைதான் அதனை அடைந்தே தீரவேண்டும் என்ற தீர்மானத்தை மனதில் எடுக்கத் தூண்டுகின்றது. உதாரணமாக க.பொ.த சாதாரண பரீட்சையில் 9 பாடங்களிலும் 'A' தரச் சித்தி அடையவேண்டும் என்ற ஆசை நம் மனதில் ஏற்படுவதாக வைத்துக் கொள்வோம். அந்த ஆசையை அடைவதாக மனதில் தீர்மானம் எடுத்து அந்த தீர்மானத்தின்படி நாம் செயல்பட்டால், அது நிச்சயம் வெற்றியை நோக்கி நம்மை நகர்த்தும்.

## உத்வேகம்

தற்பொழுது காணப்படும் போட்டி முறையிலான கல்வியினாலும் ஏனைய சில செயற்பாடுகளினாலும் பல மாணவர்களிடையே வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற உத்வேகம் மறைந்துவிடுகிறது. ஓய்வின்றி முழுநாளும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் உடலும் உள்ளமும் பெரும் அழுத்தங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாகும். எனவே, இந்த நிலையில் அவர்களிடையே உத்வேகத்தை அதிகரிக்க உடல், உள்ளம் இரண்டையும் நல்ல நிலையில் கட்டி எழுப்ப வேண்டும்.

போஷாக்கு மிக்க உணவு, உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் உடலை நல்ல நிலைக்குக் கொண்டுவரலாம். குறிப்பாக கற்கும் மாணவர்கள் நாளொன்றிற்கு குறைந்தபட்சம் ஒருமணி நேரமாவது விளையாட்டுக்களில் ஈடுபடவேண்டும். அத்துடன், உள்ளம் உயர்வடையத் தெளிவான மனநிலை அவசியமாகும். நாளொன்றிற்கு சில நிமிடங்களாவது தமது சமய வழிபாட்டிலும் தியானத்திலும் ஈடுபடுவது மனதைப் பெரிதும் அமைதிப்படுத்தும். தமது இலக்கை அடைவதற்கான உத்வேகத்தை ஏற்படுத்தும்.

## தொடர்ச்சியான அர்ப்பணிப்பு

தமது இலக்கை நெருங்குவதற்கு அர்ப்பணிப்பு மிக அவசியமாகும். உதாரணமாக நீங்கள் நாளொன்றில் அதிக நேரத்தை தொலைக்காட்சி பார்ப்பதில் செலவிடுகிறீர்கள் என வைத்துக்கொள்வோம். ஆனால், பரீட்சையில் நல்ல பெறுபேறு பெற வேண்டுமாயின், தமது லட்சியத்தை அடைவதற்குத் தடையாக இருக்கும் விடயங்களைக் கைவிட்டு அல்லது குறைத்து லட்சியத்தை அடைந்துகொள்ளும் பொருட்டு தொடர்ச்சியாகச் செயற்படுவதையே அர்ப்பணிப்பு என்கின்றோம்.

## தாங்கிக்கொள்ளும் இயல்பு

வாழ்க்கையில் நாம் பல பிரச்சினைகளை சந்திக்க நேரலாம். சிலர் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க முடியாமல் தவறான முடிவுகளையும் எடுக்கின்றனர். இது மிகத் தவறான செயலாகும். நதிகூட கற்பாறை, மலைகள் என பல தடைகளைக் கடந்து ஓடித்தான் இறுதியில் கடலில் சங்கமிக்கின்றது. அவ்வாறே, நாமும் பல்வேறு தடைகளையும் எதிர்கொண்டால்தான் வாழ்வில் வெற்றியடைய முடியும்.

**இரஞ்சித் ஜெயகர்**



என்னால் முடியாது என்ற எண்ணத்தை மனதை விட்டு அகற்றிவிடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவரசன் துதன்காம மர்மங்களைத் து



ஹொவாட் காட்டர் துதன்காமன் மம்மியை ஆராய்கின்றார்

புராதன மிசரின் ரகசியத்தை வெளிப்படுத்தும் பணிக்கு பெரும் பங்காற்றியவராக இங்கிலாந்தின் சேர்.கானவன் திகழ்கின்றார். இதற்காக அவர் பெரும் பணத்தையும் செல்வங்களையும் செலவு செய்து 20 வருடங்களாக முயற்சித்து எகிப்தில் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொண்டார். அதுவரை 200 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளில் 60 இற்கு மேற்பட்ட கல்லறைகளில் பெரும்பாலானவை திருடர்களினால் களவாடப்பட்டவையாக இருந்தன. அவற்றில் இருந்த பெறுமதிமிக்க பொருட்கள் அபகரிக்கப்பட்டிருந்தன. எஞ்சியிருந்த கல்லறைப் பகுதிகளில் சேர்.கானவன் அகழ்வுப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டார். எனினும், செலவு செய்த பணத்திற்கு ஈடாக எதுவும் கிடைக்கவில்லை. வெளிக்கொண்டுவர எகிப்தில் வேறு ரகசியங்கள் எதுவும் இல்லை என்று அகழ்வாராய்ச்சி அறிஞர்கள் சேர்.கானவனுக்குக் கூறினர். மேலும், அகழ்வுப் பணிகளைத் தொடர்வதா? இல்லையா? என்பது குறித்து யோசித்துக் கொண்டிருந்தபோதே சேர்.கானவனுக்கு ஹொவாட் காட்டர் எனும் ஓவியக் கலைஞரின் அறிமுகம் கிடைத்தது. அவர் ஓவியராக இருந்தாலும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிப் பணிகளில் அதீத ஆர்வம் கொண்டவர். இருவரும் மிசரின் மறைந்திருக்கும் ரகசியங்களை வெளிப்படுத்துவதில் அதீத ஆர்வம் மிக்கவர்களாக இருந்தனர்.

மிசர் வரலாற்றில் பாராவோ அரசன் பற்றி அவர்கள் அதிகம் வாசித்தறிந்து இருந்தனர். அதில் துதன்காமன் அரசன் பற்றியும் சிறுகுறிப்புகள் இருந்தன. ஹொவாட் காட்டரின் மனம் அந்த குறிப்பின்மீது அதிக ஈடுபாடு கொண்டது. அத்துடன், துதன்காமனின் மம்மி இதுவரை கிடைக்காவிட்டாலும் அது இங்கு எங்காவது இருக்கும் என ஹொவாட் காட்டரின் மனம் சிந்தித்தது. அகழ்வாராய்ச்சி வல்லுனர்கள் அரசரின் கல்லறை ரகசியங்கள் குறித்து கூறியவற்றை ஹொவாட் காட்டர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் இதுபற்றி சேர்.கானவனுக்குக் கூறினார். அவர் காட்டருக்காக பணத்தை முதலிட விரும்பினார். இதன்படி, காட்டர் 200 பேர் அடங்கிய குழுவொன்றுடன் சென்றார். அவரால் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் அக்குழு அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டது.



துதன்காமனின் தலைப்பகுதி

## மிகவும் அபூர்வமானதொன்று காட்டருக்கு கிடைத்தது

1922 ஆம் ஆண்டு நொவெம்பர் 4 ஆம் திகதி அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டபோது கல்லறையின் கருப்பகுதியை நோக்கிச் செல்லும் படிக்கட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. கற்களால் அமைக்கப்பட்டிருந்த அந்த படிக்கட்டுக்களைப் பார்த்த காட்டருக்குத் தான் தேடியது கிடைத்துவிட்டது என்றே தோன்றியது. இந்த அகழ்வு பற்றிக் கேள்விப்பட்ட அனைவரும் திருடர்கள் கண்டுபிடித்த மற்றுமொரு கல்லறை என்று மட்டும் கூறினர். எனினும், காட்டர் அவ்வாறு கருதவில்லை.அவர் அதுபற்றி அதிகளவில் அக்கறை காட்டினார். அவர் தமது குழுவைக் கொண்டு அகழ்வுப் பணிகளை முன்னெடுத்து கல்லறையின் வெளிப்புறக் கதவொன்றைக் கண்டுபிடித்தார். எனினும், அவர் கதவை ஒரே தடவையில் திறக்க முயற்சிக்கவில்லை. அப்பொழுது இங்கிலாந்து சென்றிருந்த சேர்.கானவன் திரும்பி வரும்வரை காத்துக்கொண்டிருந்தார். சேர்.கானவன் அவசரமாக எகிப்து திரும்பினார்.

கல்லறை கதவைத் திறந்து உள்ளறைக்குள் செல்ல காட்டர் பொறுமையிழந்து காத்துக் கொண்டிருந்தார். கானவன் திரும்பியவுடன் கல்லறைக் கதவைத் திறந்து காட்டர் உட்பகுதிக்குள் பிரவேசித்தார்.கானவன் இதனை வெளியில் இருந்து வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தார். ''காட்டர், உள்ளே என்ன இருக்கின்றது?'' கானவன் பொறுமையிழந்து கேட்டார்.

''மிகவும் விசித்திரமான விடயங்கள் உள்ளன. மிகவும் வியப்பாக உள்ளது'' உள்ளே இருந்த காட்டர் கானவனின் வியப்பைத் தூண்டும் வகையில் பதில் கூறினார். 98 ஆண்டுகளுக்கு முன்னர் மிசர் துதன்காமன் பாராவோ இளவரசனின் கல்லறை கண்டுபிடிக்கப்பட்ட தருணத்தின் விபரங்களே இவை.

அன்று காட்டர், அதுவரை எவராலும் கண்டுபிடிக்கப்படாதிருந்த முதலாவது மிசர் அரச பரம்பரையின் கல்லறை ஒன்றைக் கண்டுபிடித்தார். திருடர்களின் கண்களுக்கு அகப்படாத இந்த கல்லறையில் அனை

துதன்காமனின் உருவம் கணினியில் அமைக்கப்பட்டபோது, மம்மியின் உடல் ஸ்கேன் செய்யப்பட்டே இந்த வடிவம் பெறப்பட்டது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# னின் லக்க டி.என்.ஏ. பரிசோதனைகள்!

அவ்விதமே பாதுகாப்பாக இருந்தன. கல்லறைக்குள் அரசனின் வாழ்க்கை விடயங்களும் இறப்புக்குப் பின்னரான அவரது பயணம் பற்றிய விபரங்களும் பலவித வர்ண வேலைப்பாடுகளைக் கொண்டு ஓவியங்களாக மிகவும் அழகாக தீட்டப்பட்டிருந்தன. இவை அனைத்தும் 3300 வருடங்களாக அழி வடையாமல் இருந்துள்ளன. இதுவே எந்தப் பாதிப்பும் நேராத முழுமையான மிசர் கல்லறையாக உள்ளது. அனைத்து கல்லறைகளும் ஆயிரம் வருடங்களுக்கு முன்பே திருடர்களால் உடைக்கப்பட்டு திருடப்பட்டிருந்தன. இதனால், அரசரின் கல்லறையில் என்னென்ன பொருட்கள் இருந்தன என்பதனைக்கூட சரிவர அறிய முடியாமல் போய்விட்டது.



## துதன்காமன் கல்லறை

காட்டர் உட்பட்ட குழுவினர், இந்த கல்லறையில் உள்ள பொருட்களை வெளியில் எடுத்து பட்டியலிட சுமார் 10 ஆண்டுகளை செலவழித்தனர். இந்த பணி நிறைவடைந்த பின் பாராவோ அரசனின் செல்வத்தின் பகுதி 5000 இறாத்தலுக்கும் அதிகமாக இருந்தது. 200 இறாத்தல் நிறை கொண்ட தங்கத்தினால் செய்யப்பட்ட சவப்பெட்டியும் இதில் அடங்கும்.அதற்குள் அதிக நிறை கொண்ட தங்கத்தினால் செய்யப்பட்ட முகமூடியும் காணப்பட்டது.


21 1/2 அங்குல உயரமும் 22 இறாத்தல் நிறையும் கொண்ட அம்முகமூடி மிகவும் அழகிய வேலைப்பாடுகளைக் கொண்டிருந்தது. அதன் கண்களில் மாணிக்கக்கற்கள் பொருத்தப்பட்டிருந்தன. இது உலகில் மிகவும் அதிகமாக புகைப்படம் பிடிக்கப்பட்ட முகமூடி என்ற அந்தஸ்த்தையும் பெறுகின்றது. அதில் சிறுபிள்ளை முகம் கொண்ட அரசன் ஒருவனும் அபூர்வ விலங்குகள் சிலவும் அதில் பொறிக்கப்பட்டிருந்தன. அதில் கிடைத்த மிகவும் பெறுமதி வாய்ந்த சொத்தாக தங்கத்தினால் செய்யப்பட்ட பாராவோவின் மெழுகு சிலையும் இருந்தது. கைகளில் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு வேட்டைக்குச் செல்லும் தோற்றம் அதில் தென்பட்டது.

இது முதலை வேட்டைக்குச் சென்ற சந்தர்ப்பமாகக் கருதப் படுகின்றது. தற்போது துதன்காமன் கல்லறை என்று கூறுவது அன்று காட்டர் கண்டுபிடித்த கல்லறையாகும். அன்று கண்டுபிடிக்கப்பட்ட புராதனச் சின்னங்கள், சொத்துக்கள் இன்றும் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.அதன் ரகசியங்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இது புதிய ஆய்வுகளின் முடிவாகும்.

## டி.என்.ஏ ஆய்வுகளில் இருந்து வெளியரன ரகசியங்கள்


துதன்காமன் பாராவோவின் ரகசியங்களை வெளிப்படுத்த





விஞ்ஞானிகளால் முடிந்துள்ளது. டி.என்.ஏ பரிசோதனைகளின் ஊடாகவே இந்த மர்மங்கள் துலங்கின. இதன்படி, துதன்காமனின் பிறப்பு மற்றும் இறப்பு பற்றி நாம் எண்ணியிராத விடயங்கள் பல தெரிய வந்துள்ளன. அவரது தந்தையைப் பற்றி கூறிய விடயங்கள் உண்மையாயினும், அவரது தாயைப்பற்றிக் கூறிய விடயங்கள் தவறானவை என்று இந்த ஆய்வுகளின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. துதன்காமனின் தாய் நெப்ரத்தீ இளவரசி என்றே தொல்லியல் அறிஞர்கள் முன்பு அறிந்திருந்தனர். இந்த அனைத்து தகவல்களையும் உலகுக்கு வெளிப்படுத்தியவர் எகிப்து கெய்ரோ நகர் அருங்காட்சியகத்தின் புராதன சின்னங்கள் பற்றிய பிரதானி சாஹி ஹவாஸ் என்பவராவார். இந்த தகவல்கள் டி.என்.ஏ




மம்மியுடன் கிடைத்த தங்கத்தினாலான துதன்காமனின் முகம்


பரிசோதனைகளின் ஊடாக மட்டும் வெளியாகவில்லை. சி.டி ஸ்கேன் பரிசோதனையும் செய்யப்பட்டுள்ளது. ஹவாஸ் இதனை எகிப்து அருங்காட்சியகத்தில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே வெளிப்படுத்தினார். உலகில் இருந்து பல ஊடகவியலாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

## மலேரியாவினால் நேர்ந்த இறப்பு

புதிய ஆய்வுகளின் பெறுபேறுகளின்படி துதன்காமன் மலேரியாவினாலும் கீழே விழுந்ததனாலும் இறந்துள்ளார் என்று ஹவாஸ் சுட்டிக்காட்டுகின்றார். இதன்படி, 'துதன்காமன் இளவரசனைக் கொன்றனர்' என்ற விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகின்றது. துதன்காமன் கைத்தடியைப் பயன்படுத்தி நடந்துள்ளார் என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளதாக ஹவாஸ் தெளிவுபடுத்தினார். துதன்காமனின் மண்டையோட்டின் பின்பகுதியில் ஏற்பட்டுள்ள துவாரத்தைப் பார்த்தவுடன் முதலில் அவரைத் தலையில் தாக்கியுள்ளனர் என்றே எண்ணத் தோன்றியது. இதனாலேயே ஆய்வாளர்கள் துதன்காமன் கொல்லப்பட்டார் என்ற முடிவுக்கு வந்தனர். எனினும், அத்துவாரம் துதன்காமனின் இறப்புக்கு பின்னர் சவ அடக்கத்திற்காக செய்யப்பட்டது என்று ஹவாஸ் சுட்டிக்காட்டினார்.

இதனால், துதன்காமன் கொல்லப்பட்டார் என்பது அர்த்தமற்றதாகின்றது. ''டி.என்.ஏ சான்றுகளில் மூலம் அவர் தீவிர மலேரியாவினால் பீடிக்கப்பட்டிருந்தார் என்றும் அப்பொழுது அவரின் வயது 19 ஆக




துதன்காமனின் மர்மம் பல்வேறு நூல்களில் சஞ்சிகைகளில் வெளியான விதம்

இருந்ததாகவும் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்த அவர் நடந்து செல்லக் கைத்தடியை பயன்படுத்தினார் எனவும் மலேரியாவினால் பலவீனப்பட்டிருந்த துதன்காமன் கால்கள் சிக்கியோ அல்லது வழுக்கி விழுந்ததோ மரணம் அடைந்திருக்கலாம்'' என்று குறிப்பிட்டார் ஹவாஸ் .

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எகிப்து

**அரசு:** ஒரு சட்ட சபைகொண்ட ஒரு கட்சிக் குடியரசு.

**அமைப்பு:** கி.மு 3150 இல் முதலாவது அரச வம்சம். 28 பெப்ரவரி 1922 இல் ஐக்கிய ராச்சியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்றது. 18 ஜூன் 1953 இல் குடியரசுப் பிரகடனம்.

**தேசிய பெயர்:** ஜும்ஹூரியத் மிஸ்ர்-அல்-அரேபியா (Arab Republic of Egypt))

**தேசிய தினம்:** ஜூலை 23.

**ஜனாதிபதி** (1981): ஹொஸ்னி முபாரக்.

**பிரதமர்** (2004): அஹமட் நஸீஃப்.

## புவியியல்

இது வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள ஓர் ஆபிரிக்க நாடாகும். மத்திய தரைக்கடலை கரையோரமாகக்கொண்ட எகிப்தின் எல்லைகளாக மேற்கு-லிபியா; தெற்கு-சூடான்; கிழக்கு-செங்கடல், இஸ்ரேல் என்பன அமைந்துள்ளன. எகிப்தின் மத்தியில் பாயும் 'நைல்' நதியினால் அது இரு பெரும் நிலப்பகுதிகளாகப் பிரிந்துள்ளது. பெரும்பாலான பிரதேசங்கள் தாழ்நிலங்களையும் கடற்கரை மணல் குன்றுகளையும் சிறிய பள்ளங்களையும் கொண்டுள்ளன. மனிதக் கரங்களால் உருவாக்கப்பட்ட நாஸர் ஏரியும் அஸ்வான் அணைக்கட்டும் எகிப்தின் முக்கிய அம்சங்களாகும்.

**மொத்தப் பரப்பு:** 386,662 ச.மைல் (1,001,450 கி.மீற்றர்);

**நிலப்பரப்பு:** 384,344 ச.மைல் (995,451 ச.கி.மீ).

**உயர் சிகரம்:** கெத்தரின் மலை 2637 மீற்றர் (8652 அடி);

**தாழ் மையம்:** கட்டாரா பள்ளத்தாக்கு 133 மீ).

**நிலப்பிரிவு:** 26 ஆள்புலங்கள்.

**மக்கள் தொகை** (2009): 83,082,869.

**மொழிகள்:** அரபு (உத்தியோகபூர்வ மொழி): ஆங்கிலம், பிரெஞ்ச்.

**இனங்கள்:** எகிப்தியர் 98%;பெர்பெர், நியூபியன், பெடோயுன், பேஜா 1%; கிரேக்கர், ஆர்மேனியன் மற்றும் ஐரோப்பியர் (குறிப்பாக இத்தாலி, பிரெஞ்ச்) 1%.

**மதங்கள்:** இஸ்லாம் (பெரும்பாலும் சுன்னி) 90%, கொப்டிக் 9%, கிறிஸ்தவர் 1%, ஏனையவை 6%.

**எழுத்தறிவு வீதம்** (2005): 71.4%. **தலைநகரமும் பெரிய நகரமும்:** கெய்ரோ.

**ஏனைய பெரிய நகரங்கள்:** அலெக்ஸாண்ட்ரியா, கிஸா, ஷப்ரா அல்கீமா, அல் மஹல்லா அல் குப்ரா.

**நாணயம்:** எகிப்திய பவுண். **இணையத்தளக் குறியீடு:** .eg

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** +20

**தேசிய சின்னங்கள்:** **மலர்**-lady slipper, பறவை-Steppe Eagle; மிருகம், விளையாட்டு, கால்பந்து என்பன பிரகடனப்படுத்தப்படவில்லை.

**தேசிய கீதம்:** Biladi, biladi, biladi
Laki hubbi wa fu'adi
Biladi, biladi, biladi
Laki hubbi wa fu'adi....என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

எகிப்திய வரலாறு கி.மு 4000 வருடங்களுக்கும் முற்பட்டதாகும்.கி.மு 525 இல் பாரசீகரினது ஆதிக்கத்திற்கு உட்பட்டது. கி.மு 332 இல் மகா அலெக்ஸாண்டர் எகிப்தைக் கைப்பற்றினார். அதனைத் தொடர்ந்து கிரேக்கர், ரோமானியர் மற்றும் பைஸாண்டிய ஆட்சிக்கும் எகிப்து உட்பட்டது. இதையடுத்து சுமார் ஆறு நூற்றாண்டுகளுக்கு அரேபியர் ஆட்சி நிலவியது.1250 இல் 'மாம்லுக்' இராணுவக் குழுவினதும் 1517 இல் ஒட்டோமன் துருக்கியின் ஆட்சியும் நிலவியது. 1798 முதல் 1801 வரை நெப்போலியனின் ஆக்கிரமிப்புக்குள்ளானது. 1882 இல் பிரித்தானியர் எகிப்தைக் கைப்பற்றி தமது ஆட்சியை நிறுவினர். 1922 இல் அரைவாசிப் பகுதி சுதந்திரம் பெற்று, இரண்டாம் உலகப் போரையடுத்து முழுமையாக சுதந்திரம் பெற்றது. 1952 இல் நிகழ்ந்த இராணுவப் புரட்சியை அடுத்து மன்னராட்சி மறைந்தது.


கர்னக் ஆலயங்களின் இடிபாடுகள்


ஜனாதிபதி


பிரதமர்

## கலாசாரம்

ஆழமான மத நம்பிக்கைகொண்ட எகிப்திய மக்கள் மத்தியில் பிற்காலத்தில் ஐரோப்பிய, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க கலாசாரங்கள் செல்வாக்குச் செலுத்தின. ஆரம்பத்தில் பூர்வீக மதநம்பிக்கைகளும், அதனையடுத்து கிறிஸ்தவமும் பிற்காலத்தில் இஸ்லாமிய கலாசாரமும் மேலோங்கி நின்றன.

## காலநிலை

தலைநகர் கெய்ரோவிலும் நைல் நதி கரையோரங்களிலும் அதனையொட்டிய சமவெளிகளிலும் மாரி காலத்தில் சற்றுக் குறைவான வெப்பம் நிலவுகின்றது. இங்கு 60-70°F வெப்பம் பொதுவாக நிலவுவதோடு, சிலவேளைகளில் 40°F ஆகவும் குறைவடையும். கோடைகாலத்தில் அதிக வெப்பம் நிலவுகின்றது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்: பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்**-10.8 மில்லியன்; **செல்லிடத் தொலைபேசிகள்:** 18001 மில்லியன். **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1999): AM 42, FM 14, SW 3. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்:** 98. **இணையத்தள வழங்குனர்கள்** (2004): 5363. **இணையத்தளப் பாவனையாளர்கள்:** 6 மில்லியன்.

## போக்குவரத்து


**புகையிரதப் பாதைகள்:** மொத்தம் 5063 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்:** மொத்தம் 92370 கி.மீ. **நீர்வழிப் போக்குவரத்து:** 3500 கி.மீற்றர். **துறையும் துறைமுகமும்:** அலெக்ஸாண்ட்ரியா, டெமிஎட்டா,அல் டெக்ஹெய்லா,போர்ட் ஸைய்ட். **விமான நிலையங்கள்** (2007): 88.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 3%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** பருத்தி, தானியங்கள், பழங்கள், மரக்கறி வகைகள், மாடு, நீர் எருமை, செம்மறி ஆடு, ஆடுகள். **தொழிலாளர் தொகை** (2007): 22.5 மில்லியன். (இதில் விவசாயம் 32%, கைத்தொழில் 17%, சேவைகள் 51%). **வேலையற்றோர்:** 9.1%. **கைத்தொழில்கள்:** புடவைக் கைத்தொழில், உணவுப்பொருள் உற்பத்தி, உல்லாசப் பயணத்துறை, கட்டடப் பொருட்கள், உலோகப் பொருட்கள். **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், கனிய வளங்கள். **ஏற்றுமதிகள்:** மசகு எண்ணெய் மற்றும் பெற்றோலிய உற்பத்தி பொருட்கள், பருத்தி, புடவைகள், உலோக உற்பத்திப் பொருட்கள். **இறக்குமதிகள்:** இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும், உணவுப் பொருட்கள், மரத்தளபாடங்கள், எரிபொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** இத்தாலி, ஐ.அமெரிக்கா, சிரியா, ஜேர்மனி, ஸ்பெய்ன், பிரான்ஸ், சீனா, ஐ.ராச்சியம், சவுதி அரேபியா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

✱ பிரமிட்டுக்கள் ✱ கான் அல்-கலீலீ சந்தை, புராதன சொத்துக்களுக்கான எகிப்திய நூதனசாலை-கெய்ரோ ✱ அபூ சிம்பல் கற்பாறை செதுக்கல்கள் ✱ கர்னக், லக்ஷோர் ஆலயங்கள் ✱ மன்னர்களின் பள்ளத்தாக்கு (62 மன்னர்களின் கல்லறைகள்) ✱ பொம்பீஸ் தூண், பைப்லோதியா அலெக்ஸாண்ட்ரியா (பெரிய வாசிகசாலை மற்றும் கலாசார மண்டபம்) ✱ சினாய் மலை.


அபூ சிம்பல்


புராதன சொத்துக்களுக்கான எகிப்திய நூதனசாலை


கெய்ரோ நகரின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியத்திற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் பிரதான அலுவலகம்



பணிப்பாளர் நாயகம்-மார்கட் சான்



உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைமையகம்

**ஆரோக்கியமே மிகப்பெரிய சொத்தாகும். சிறியவர்களான நம்மை நோய்களில் இருந்து பாதுகாப்பதும் நமது நோய்களைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் பெற்றோர்களின் கடமையாகின்றது. உலக மட்டத்தில் மக்களின் சுகாதார நிலைமைகளைப் பற்றி ஆராயும் ஓர் அமைப்புண்டு. அவர்கள் ஒவ்வொரு நாட்டினதும் சுகாதாரப் பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து செயற்பட்டு வருகின்றனர். இதனை 'உலக சுகாதார அமைப்பு' என்று கூறுவோம். இதன் பிறந்தநாள் வருடாந்தம் ஏப்ரல் 7 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இந்த நாள் குறித்து சற்றுப் பார்ப்போம்.**

## உலக சுகாதார அமைப்பு என்றால் என்ன? (World Health Organization-WHO)

1946 ஆம் ஆண்டு சர்வதேச சுகாதார சம்மேளனத்தின்போது நிறைவேற்றி அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்ப 28 நாடுகள் ஒன்றிணைந்து 1948 ஏப்ரல் 7 ஆம் திகதி உலக சுகாதார ஸ்தாபனம் அமைக்கப்பட்டது.

## மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்

இந்த அமைப்பினால் சுகாதாரத்திற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பை முன்னேற்றி நோய்க்கட்டுப்பாடு மற்றும் ஒழித்தலுக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஐ.நாவின் சட்டத்திட்டங்களுக்கு ஏற்ப அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அவ்வமைப்பு கட்டுப்பட்டுள்ளது.

## சுகாதார ஸ்தாபனத்தின் உறுப்பினர்கள்

இந்த ஸ்தாபனத்தை உருவாக்கும்போது உறுப்பு நாடுகளாக 26 நாடுகள் இருந்தன. தற்போது இதன் எண்ணிக்கை 192 ஆக உயர்ந்துள்ளது. இது ஒரு சபையாகவே கருதப்படுகின்றது. இச்சபை வருடந்தோறும் கூடும்போது, எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் கொள்கைகள், அரசாங்கத்தால் நியமிக்கப்படும் சுகாதார நிபுணர்கள் முப்பது பேரைக் கொண்ட நிறைவேற்று சபையினால் அமுல்படுத்தப்படும். இச்சபை வருடத்திற்கு இரு தடவைகள் கூடும்.

## சுகாதார ஸ்தாபனத்தின் தலைமையகம்

இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது.

## இதன் பணியாளர் குழு

தலைமையகத்திற்குப் புறம்பாக சுகாதார ஸ்தாபனத்தின் உறுப்பினர் அலுவலகங்கள் ஆறு உள்ளன. அவை;

- கொங்கோவில் பிரசவில் (தற்காலிகமாக சிம்பாப்வே ஹராரேவுக்கு இடமாற்றப்பட்டுள்ளது)
- ஐக்கிய அமெரிக்காவில் வொஷிங்டன்.
- டிசி எகிப்தில் கெய்ரோ.
- டென்மார்க்கில் கொபன்ஹேகன்
- இந்தியாவில் புதுடில்லி
- பிலிப்பைன்ஸில் மணிலா ஆகிய நகரங்களில் WHO வின் பிராந்திய அலுவலகங்கள் உள்ளன.
- இங்கு ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒவ்வொரு பணிப்பாளர் உள்ளார்.

தற்போது இதன் பணிப்பாளர் நாயகம் பதவியை மார்கட் சான் என்பவர் வகிக்கின்றார். உலக சுகாதார ஸ்தாபனத்தின் மொத்த ஊழியர்கள் எண்ணிக்கை 3800.




"உயிர்களைப் பாதுகாப்போம்-அவசர விபத்து சேவைகளுக்கு மருத்துவமனைகளை பாதுகாப்பான முறையில் வைத்துக்கொள்வோம்"

## அமைப்பின் நோக்கம்

தனது உறுப்பு நாடுகளின் சுகாதாரப் பிரச்சினைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொடுப்பது, ஒத்துழைப்பினை முன்னேற்றுவது, அதன் ஊடாக நோய்களைக் கட்டுப்படுத்துவது, நோய்களை ஒழிப்பது, அதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து அமுல்படுத்துவது, வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் பாடுபடுவது மற்றும் அனைவருக்குமான அதிஉயர் சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொடுப்பது என்பன உலக சுகாதார ஸ்தாபனத்தின் நோக்கங்களாகும்.

## நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள மேற்கொள்ளப்படும் நடைமுறைகள்

- குறிப்பாக வறுமை மற்றும் கவனிப்பாரற்று இருக்கும் மக்கள் தொடர்பில் அக்கறை செலுத்துவதும் அதிக மரண விகிதம் மற்றும் குறைபாடுகள் நிகழும் முறைகள் பற்றி ஆராய்ந்து அவற்றைக் குறைத்தலும்.
- ஆரோக்கியமான வாழ்க்கை முறையை உருவாக்குதலும் சூழல் பொருளாதாரம், சமூக நடத்தைகள் காரணமாக ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகளைக் குறைத்தலும்.
- மக்களின் நீதியானதும் வினைத் திறன் மிக்கதுமான கோரிக்கைகள் தொடர்பில் (சட்டரீதியானவை) உணர்வுபூர்வமாக செவிமடுத்து நிதி உதவிகளை அளித்து ஒத்துழைத்தல்.
- தகுந்த சுகாதாரக் கொள்கைகளை அமுல்படுத்தல்.

## உலக சுகாதார தினம்

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 7 ஆம் திகதி உலக சுகாதார தினம் கொண்டா டப்படுகின்றது. அன்றைய தினம் சுகாதாரம் பற்றி விழிப்புணர்வூட்டுதல், கல்விச் செயற்பாடுகள் என்பன உலகம் முழுவதும் அமுல்படுத்தப்படுகின்றன. அதேபோன்று இந்நிகழ்ச்சித்திட்டங் களுக்கென அந்தந்த நாடுகளின் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் இணைந்து செயற்படுகின்றன.

## சுகாதார தினத்தின் தோற்றம்

உலக சுகாதார ஸ்தாபனம் 1948 ஏப்ரல் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டது. அதன் ஆரம்பத்தை நினைவூட் டும்முகமாக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 7 ஆம் திகதி உலக சுகாதார தினம் கொண்டாடப்படுகின்றது.



உலக சுகாதார ஸ்தாபனத்தின் உத்தியோகபூர்வ இலச்சினை.

இவ்வாறான தினத்தை அனுஷ்டிக்க 1948 ஆம் ஆண்டே தீர்மானிக்கப்பட்டது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் முதற்கட்டத் தொடரிலேயே இது தீர்மானிக்கப்பட்டது. 1950 தொடக்கம் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. 2010 ஆம் ஆண்டுடன் உலக சுகாதார ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு 62 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

## தொனிப்பொருளின் ஊடாக செய்தி

தற்போதுள்ள சுகாதார வசதிகளை மென்மேலும் மேம்படுத்துவோம் என்பதே இவ்வருட தொனிப்பொருளாகும். அவசர ஆபத்து வேளைகளை எதிர்கொள்ள சுகாதார ஊழியர்களும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். இவ்வாறான விபத்துக்களின்போது பொதுமக்களின் அச்சத்தைப் போக்குவதும் பாதுகாப்பை அளிப்பதும் பொறுப்புகளாகும். பாதுகாப்பான பிரசவத்திற்கான சேவை, நோய் எதிர்ப்புச் சக்திக்கான சேவைகள், நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டவர்களுக்கான சுகாதார சேவைகள் என்பன குறித்தும் அக்கறை செலுத்தப்பட வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட இம்மக்களுக்கு துரித கதியில் சேவைகளை வழங்குவது அவசியமும் பொறுப்புமாகும்.

இவ்வாறு அவசர ஆபத்து நிலைமைகள் எமது நாட்டிலும் ஏற்படக்கூடும். இதனால், நாம் அதற்குத் தயாராக இருக்கவேண்டும் என்பதே இம்முறைக்கான தொனிப்பொருளின் செய்தியாகும்.




எந்தவொரு அவசர நிலையையும் எதிர்கொள்ளத் தயாராக இருத்தல் அவசியம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் I (கடந்த வாரத் தொடர்ச்சி.....)

சுட்டெண்: .............................. நேரம்: 45 நிமிடங்கள்

★ தரப்பட்ட கட்டத்தை அவதானித்து 19, 20 ஆம் வினாக்களுக்கு விடை தருக.




19. இங்கு 1 எனக் குறிப்பிட்ட இடத்தில் இடமிருந்து வலமாக வரக்கூடிய சினைப்பெயர் சொல்;
(i) தழை (ii) தலை (iii) தன்

20. இங்கு 2 எனக் குறிப்பிட்ட இடத்தில் மேலிருந்து கீழாக வரக்கூடிய மூன்றெழுத்து இடப்பெயர்ச் சொல்;
(i) கனவு (ii) கதவு (iii) கண்டி

★ 21 முதல் 23 வரையான வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

21. ரவி சந்தைக்குச் சென்று ரூபா 75.00 வீதம் 3 பலாப்பழங்களையும் ரூபா 22.50 வீதம் 2 அப்பிள் பழங்களையும் ரூபா 35.50 வீதம் 2 மாம்பழங்களையும் ரூபா 62.50 வீதம் 2 பப்பாசிப்பழங்களையும் வாங்கி, ரூபா 500.00 தாள் காசு ஒன்றையும் 4 ரூபா நாணயம் ஒன்றையும் கொடுத்தான். அவனுக்கு மிகுதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?
(i) ரூபா 75.00 (ii) ரூபா 30.00 (iii) ரூபா 40.00


22. குணாலுக்கு இடது பக்கத்தில் கண்ணனும், கண்ணனுக்கு இடது பக்கத்தில் அன்வரும், தயாவுக்கு தெற்குப் பக்கத்தில் கண்ணனும், கண்ணனுக்கு தெற்குப் பக்கத்தில் ரவியும் இருந்தனர். இவர்களில் நடுவில் இருந்தவர் யார்?
(i) குணால் (ii) ரவி (iii) கண்ணன்

23. குறித்த வேலையை 8 மனிதர்கள் 12 நாட்களில் செய்து முடிப்பர் ஆயின், அதே வேலையை 2 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?
(i) 24 நாட்களில் (ii) 36 நாட்களில் (iii) 3 நாட்களில்

24. 400 மில்லிலீற்றர் எண்ணெய் வாங்க 18 ரூபா தேவைப்படுகிறது. ஆகவே, ஒரு லீற்றர் எண்ணெய் வாங்க எவ்வளவு பணம் தேவை?
(i) ரூபா 45.00 (ii) ரூபா 22.50 (iii) ரூபா 4.50

25. சதுரம் ஒன்றின் நீளம் 9cm ஆகும். அவ்வாறான 4 சதுரங்களை ஒன்றுடன் ஒன்று தொடுமாறு இணைத்து ஒரு பெரிய சதுரம் உருவாக்கப்பட்டது. அப்பெரிய சதுரத்தின் சுற்றளவு யாது?
(i) 63cm (ii) 72cm (iii) 36cm

★ பின்வரும் படவரைபின்படி 26 முதல் 28 வரையிலான வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்து கோடிடுக.





✱ ஓர் அப்பிள் பழம் 4 எண்ணிக்கையைக் குறிக்கும்.
✱ ஒரு மாம்பழம் 3 எண்ணிக்கையைக் குறிக்கும்.
✱ ஒரு பப்பாசிப்பழம் 2 எண்ணிக்கையைக் குறிக்கும்.

26. கூடிய எண்ணிக்கையுள்ள பழம் எது?
(i) அப்பிள் (ii) பப்பாசி (iii) மாம்பழம்

27. அப்பிள் பழங்களின் எண்ணிக்கைக்கும் மாம்பழங்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?
(i) 18 (ii) 3 (iii) 5

28. மொத்தப் பழங்களின் தொகை யாது?
(i) 52 (ii) 55 (iii) 20


29. கீழே முதலில் தரப்பட்டுள்ள உருவில் காட்டப்பட்டுள்ள கோடுகள் வழியே வெட்டி எடுக்கப்பட்ட துண்டுகளைக்கொண்டு அமைக்கப்பட்ட சரியான உருவைக்கொண்ட விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.



(i) (ii) (iii)





30. தரப்பட்ட உருவின் பகுதிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.



(i) (ii) (iii)


பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


★ 31, 32 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

31. 
இங்கு வரவேண்டிய இடத்தில் பொருத்தமான பகுதியை நிரப்புக.

32. 
இங்கு வரவேண்டிய இடத்தில் பொருத்தமான பகுதியை நிரப்புக.

★ 33, 34 ஆம் வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

33. 
(i) 3/8 (ii) 2/4 (iii) 2/8

34. 
(i) 1/4 (ii) 2/8 (iii) 1/8

★ 35, 36 ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள கருத்துக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

35. நாம் தொலைக்காட்சி பார்ப்பது;
(i) பாடலைக் கேட்பதற்கு (ii) சினிமாப் படங்களைப் பார்ப்பதற்கு
(iii) அறிவுடன்கூடிய ஆளுமையை வளர்ப்பதற்கு


36. நாம் சுத்தத்தைப் பேணுவது;
(i) அழகாக வாழ்வதற்கு (ii) பெருமையோடு வாழ்வதற்கு
(iii) ஆரோக்கியமாக வாழ்வதற்கு

★ 37, 38 ஆம் வினாக்களில் தரப்பட்ட கணிதச் செய்கையின் விடுபட்ட இடத்தை நிரப்புக.

37.
```
  □ 8 9
+ 2 1 □
-------
  9 0 0
```

38.
```
  5 7 □ 0
- 3 6 9 9
---------
  2 0 0 □
```

★ 39, 40 ஆம் வினாக்களுக்கு அடைப்பினுள் தரப்பட்டுள்ள தகவல்களின் மூலம் விடை தருக.




39. இங்கு முக்கோணத்தில் காணப்படும் 9 என்ற எண்ணை உருவாக்க தரப்பட்டுள்ள எண்கள் இரண்டைச் சேர்த்து உருவாக்க முடியாத எண்ணின் வடக்குத் திசையில் இருக்கும் உயிர்மெய் எழுத்தின் மீது கட்டமிடுக.

40. யானையுடன் தொடர்புடைய சொல் ஒன்றினைக் குறிக்கும் மூன்று எழுத்து தமிழ்ச் சொல்லை உருவாக்கும் எழுத்துக்களை அவற்றின் அருகே காணப்படும் புள்ளிகள் வழியே இணைத்துக் காட்டுக.

வினாத்தாள் I இன் விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலம்பஸ்ஸின் நாடுகாண் சவாரி



**அன்று ஐரோப்பியர் அறிந்திருந்த உலகத்தைவிட இருமடங்கு அளவான உலகை காண காரணமாகத் திகழ்ந்தவர் தான் க்றிஸ்டோபர் கொலம்பஸ். 'புதிய உலகம்' என அழைக்கப்படுகின்ற அமெரிக்க கண்டத்தை அவர் கண்டுபிடித்ததே அதற்குரிய காரணமாகும். கொலம்பஸ்ஸின் கண்டுபிடிப்பிற்கு ஏறக்குறைய 5 நூற்றாண்டுகளுக்கு முன்பு லீப் எரிக்சன் போன்ற தேச சஞ்சாரிகளால் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும், அது வாய்மொழிச் செய்தியாக மட்டுமே காணப்பட்டது. கடற்பயண வழிகாட்டிக்கான எவ்வித ஆதாரமும் அதன்மூலம் கிடைக்கவில்லை. அதனால் தான் கொலம்பஸ்ஸின் அமெரிக்க சவாரியை 'நவீன அமெரிக்க வரலாற்றின் ஆரம்பம்' என வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.**

## ஆரம்பகால வாழ்க்கை

ஜெனீவாவில் வாழ்ந்த ஸ்பானிய யூத குடும்பத்திலேயே கொலம்பஸ் பிறந்தார். இவரது தந்தை ஒரு நெசவுத் தொழிலாளி. சிறுவயது முதல் நெசவு நெய்வதில் தனது தந்தைக்குப் பெரிதும் உதவியாக கொலம்பஸ் இருந்தார். 14 ஆவது வயதில் கடற்பயண நடவடிக்கைகள் குறித்து கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். ஒருமுறை அவர் பயணித்த கப்பலொன்று போர்த்துக்கல்லுக்கு அருகில் சேதமடைந்து கடலில் மூழ்கியது. 1476 இல் நடந்த இச்சம்பவத்தில் கொலம்பஸ் போர்த்துக்கல் கரையோரம் நோக்கி நீந்தி உயிர் பிழைத்தார். இதன் பின்னர் போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் வாழ்ந்து வந்த தன் சகோதரனாகிய பர்த்தலோமியோஸுடன் உடன் வாழ்ந்துவந்தார். அவருடன் இணைந்து கடற்பயண நடவடிக்கைகளையும் கடற்பயண வழிகாட்டி வரைபடங்களையும் தேசப் படங்களை வரைவதிலும் அதிக அக்கறை செலுத்தினார்.

பின்னர், போர்த்துக்கேய மன்னனிடம் சேவை செய்துகொண்டிருந்த பிரதான கடலோடி ஒருவரின் மகளை 1478 இல் கொலம்பஸ் திருமணம் செய்து கொண்டார். இதனையடுத்து, முக்கிய அதிகாரிகளை சந்திக்கும் வாய்ப்பு கொலம்பஸுக்கு கிட்டியது. அவரது கடற்பயண நடவடிக்கைகளுக்காக போர்த்துக்கேய மன்னனாகி இரண்டாம் ஜோனின் உதவியைப் பெற முயற்சித்தபோதும் அது தோல்வியில் முடிந்தது. எனினும், பல்கலைக்கழக பேராசிரியர்களதும் அரச சேவையில் ஈடுபட்ட பிரபுக்களினதும் பிரபலங்களினதும் வற்புறுத்தலின்பேரில் ஸ்பானிய மன்னனாகிய ஃபேர்டினன் மற்றும் இசபெலா ராணி ஆகியோரின் அனுமதியும் கொலம்பஸ்ஸிற்குக் கிடைத்தது.

## கடற்பயணத்தின் ஆரம்பம்

மார்டின் பின்தொன் (Martin Pinthon) மற்றும் அவரின் சகோதரனாகிய விசெந்டி (Vicente) யுடன் இணைந்து 1492 இல் கொலம்பஸ் தனது கடற் பயணத்தை ஆரம்பித்தார். முதன்முதலாக அவர் கெனேரி தீவை அடைந்தார். ஏறக்குறைய ஒரு மாதமாக கடலில் அங்குமிங்கும் பயணத்தும் எந்தவித தரைப்பகுதியும் கண்ணுக்குத் தென்படாததால் இன்னும் 3 நாட்களுக்குள் திரும்பிச் செல்வதென கொலம்பஸ்ஸும் அவரது உதவியாளர்களும் தீர்மானித்தனர். எனினும், அதனிடையே அவர்கள் ஒரு தரைப்பகுதியை சென்றடைந்தனர்.

ஸ்பானிய மன்னனை நினைவுகூருமுகமாக அப்பிரதேசத்துக்கு சென் செல்வடோர் (San Salwadore) எனும் பெயரை வைத்தனர். அப்போது, தான் கண்டுபிடித்த நாடு இந்தியா என எண்ணிய கொலம்பஸ், அங்கு வாழ்ந்த சுதேசிகளான அரவக் (Arawak) மக்களை 'இந்தியர்கள்' என குறிப்பிட்டார். அமெரிக்க பூர்வீக குடிகளுக்கு இத்தகைய பெயர் வர இதுவே காரணமாகும். அதன்பின்னர் புயலில் சிக்கித் தவித்த பின்தொன்னின் கப்பலை தேடும் முயற்சியில் ஈடுபட்ட போது,கியூபாவைக் கண்டுபிடித்ததோடு ஹெயிட்டியையும் அடைந்தார். அந்நாட்டின் அழகால் வசீகரிக்கப்பட்டு அப்பிரதேசத்திற்கு 'சின்ன ஸ்பானியா' என பொருள்படும் ரீதியில் 'ஹிஸ்பெனியொலா' என பெயரிட்டார். அத்தோடு, தனது குழுவில் ஒரு பகுதியினரையும் அங்கு நிறுத்தினார்.

1493 இல் மீண்டும் ஸ்பெய்னுக்கு வருகை தந்த கொலம்பஸ்ஸிற்கு கடல் நடவடிக்கைக்கான 'அட்மிரல்' பதவி வழங்கப்பட்டது. அத்துடன், இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதும் இனி கண்டுபிடிக்கப்படப் போவதுமான பிரதேசங்கள் அனைத்திற்கும் ஆள்பதியாகவும் கொலம்பஸ் நியமிக்கப்பட்டார்.

அதே ஆண்டில் தனது இரண்டாவது பயணத்தின்போது கண்டுபிடிக்கும் பிரதேசங்களில் குடியேற்றங்களை நிறுவுவதில் அவர் கூடிய கவனம் செலுத்தினார். லெசர் அன்டிலிஸ் (Lesser Antilles), மேற்கிந்திய தீவுக்கூட்டங்களில் ஒன்றாகிய லிவர்ட் தீவு, புனித கிட்ஸ் (St.Kitts), வேர்ஜின் தீவு (Virgin Islands),போர்ட்டோ ரிகோ (Port Rico) மற்றும் குவாடலுப் தீவு (Gudalupe) என்பனவற்றை இப்பயணத்தின்போதே கண்டுபிடித்தார். பின்னர் மீண்டும் ஹிஸ்பெனியொலாவுக்குத் திரும்பினார். அப்பொழுது அங்கிருந்த குடியேற்றவாசிகள் கொலம்பஸ்ஸின் அதிகாரத்தை எதிர்த்தனர். அதனால், அந்த ஆட்சி அதிகாரத்தை தனது சகோதரனாகிய பர்த்தலோமியஸிடம் கையளித்துவிட்டு, 1496 இல் மீண்டும் ஸ்பெய்னுக்குத் திரும்பினார்.

1498 இல் கொலம்பஸ் தனது மூன்றாவது பயணத்தை ஆரம்பித்தார். இப்பயணத்தின்போது கேப்வர்ட் தீவுகளையும் டிரினிடாட் தீவையும் கண்டுபிடித்தார். தீவைச் சுற்றி பயணித்து பேரியா (Peria) வளைகுடாவுக்கு வருகை தந்த கொலம்பஸ், தென் அமெரிக்காவின் வெனிசுவெலா நாட்டின் கரையோரத்தைக் கண்டபொழுதிலும் ஹிஸ்பெனியொலாவில் கலவரம் மூண்டதன் காரணமாக அதனை இடைநிறுத்திவிட்டு திரும்பிச் செல்ல நேரிட்டது.

## இறுதிக்காலம்

ஆள்பதியாக நியமிக்கப்பட்ட பகுதிகளில் கொடூரமானதும் வினைத்திறனற்றதுமான ஆட்சியை மேற்கொண்டமைக்காக கொலம்பஸ் கைது செய்யப்பட்டு ஸ்பெய்னுக்கு அனுப்பப்பட்டார். பின்னர் ஸ்பானிய மன்னர் மற்றும் அரசியினால் அவர் விடுவிக்கப்பட்டார். எனினும், அவரது பதவி பறிபோனது. இதனையடுத்து, நாடுகாண் பயணங்களுக்கான வாய்ப்பு அமெரிகோ வெஸ்புஷி உள்ளிட்ட குழுவினருக்குக் கிட்டியது.

1502 இல் கடற்பயணங்களுக்கான அனுமதி மீண்டும் கொலம்பஸ்ஸிற்கு கிடைத்தது. அந்த பயணங்களின்போது பாரிய புயல்களுக்கு மத்தியில் ஹொண்டூரஸ் கரையைத் தாண்டி டேரியன் விரிகுடாவிற்குச் சென்றார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஜெமெய்க்காவில் சுமார் 1 வருடம் தரித்திருந்தார். இதன்போது, நோய்த்தாக்கங்களுக்கு உள்ளானார். 1504 இல் அவர் ஸ்பெய்னை வந்தடைந்தார். எனினும், முன்னைய மரியாதையோ வரவேற்போ அவருக்குக் கிடைக்கவில்லை. 1506 மே மாதம் 20 ஆம் திகதி ஸ்பெய்னிலுள்ள வெலடொலிட்டில் கொலம்பஸ் காலமானார்.

(அ)





கொலம்பஸ்ஸின் சவாரி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வௌவால்களை பேய்க

அழகும் ஆபத்தும் விசித்திரமும் மர்மமும் இந்த உலகில் எங்கும் விரவிக் கிடக்கின்றன. அவற்றில் விசித்திரமான, மர்மமான விடயங்களை அறிய நம்மில் பலருக்கும் ஆர்வம் இருக்கும்.

அந்தவகையில், விஞ்ஞான ரீதியில்கூட விளக்கமளிக்க முடியாத சில மர்மங்களும் சில வேளைகளில் இடம்பெறத்தான் செய்கின்றன. இன்னும் சில மூடநம்பிக்கைகளாக மக்கள் மத்தியில் பரவியுள்ளன. இத்தகைய சம்பவங்களை அடிப்படையாக வைத்து புனைகதைகளும் எழுதப்பட்டன.



இளவரசன் விலட்



ப்ரேம் ஸ்டோக்கர்

## இரத்தம் உறிஞ்சிக் குடிப்பவை

"மனிதன் இரத்தம் குறித்து இன்று நேற்றுக் கவனம் செலுத்தவில்லை. ஆரம்பகாலம் தொடக்கம் மனிதனுக்கு இதுபற்றி அதிக அக்கறை இருந்தது" என அமெரிக்க பொஸ்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ரேமன்ட் மக்னெலி கூறுகின்றார். இவர் இரத்தம் உறிஞ்சிக் குடிக்கும் இரத்தக் காட்டேரிகள் குறித்தும் அது பற்றிய மக்கள் கதைகள் குறித்தும் விரிவாக ஆராய்ந்து வருபவராவார்.

"மனித உடலில் இரத்தம் வெளியேறும்போது சிலவேளைகளில் உயிரிழப்புக்களும் சம்பவிக்கின்றன என்பதை பாமர மக்களும் அறிந்திருந்தனர். இன்னும் சிலர் உடலுக்குள் இரத்தத்தை நிரப்பினால் மீள உயிர் கிடைக்கும் என்றும் நம்பினர்" என்று மக்னெலி மேலும் கூறுகின்றார்.

இதனால்தான் இரத்தம் குடித்து சாகாவரம் பெற்று வாழ முயற்சிப்பவர்கள் குறித்த புனைகதைகளும் எழுதப்பட்டன. 'எஸ்டெக்' புனைகதைகளில் வருகின்ற 'சிவடேட்டியோ' மற்றும் புராதன கிரேக்க கதைகளில் வருகின்ற 'லமீயா' போன்ற கதாபாத்திரங்கள் இவ்வாறான இரண்டு அமானுஷ்ய காட்டேரிகள் ஆகும். சீனாவிலும் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் விலங்கொன்று உள்ளது. அதனை 'ஜியங் ஷி' என்று அழைக்கின்றனர்.

பிலிப்பைன்ஸின் எல்லைக் கிராமங்களில் வாழும் மக்களை அச்சுறுத்தி வந்த இரத்தம் குடிக்கும் காட்டேரி விலங்கு இனமொன்று இருந்ததாகக் கூறப்படுகின்றது. 'மனன்கால்' என இது அழைக்கப்படுகின்றது. இந்த விலங்கினம் மனிதர்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பது மட்டுமன்றி, அதற்கு வௌவாலுக்கு இருப்பது போன்ற இரு இறக்கைகளும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அத்துடன், வெள்ளைப்பூண்டுக்கு இந்த விலங்கினம் அச்சத்தையும் வெறுப்பையும் வெளிக்காட்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## இரத்தம் குடிக்கும் காட்டேரி வௌவால்கள்

இரத்தம் உறிஞ்சிக் குடிக்கும் வௌவால்கள் ஐரோப்பாவில் காணப்படுவதில்லை. இவற்றை மத்திய மற்றும் தென் அமெரிக்காவுக்குச் சென்ற ஸ்பெய்ன் கடற் பிரயாணிகளே கண்டுள்ளனர். இவற்றை 'காட்டேரி வௌவால்கள்' (Vampire Bats) என்றே இவர்கள் அழைத்தனர். இவை பண்ணைகளில் உள்ள கால்நடைகளின் உடம்பில் தாவி இரத்தத்தை உறிஞ்சும் இயல்புடையன. இது நுளம்பு அல்லது அட்டைகள் நமது உடலில் இருந்து இரத்தம் உறிஞ்சுவது போன்றிருக்கும். அந்த வௌவால்கள் அவற்றுக்குத் தேவையான அளவு இரத்தத்தினை மட்டும் உறிஞ்சிக்கொண்டு பறந்து விடும். எனவே, இதன்போது பண்ணை விலங்குகள் இறப்பதற்கான வாய்ப்புகள் குறைவு.

## காட்டேரிகள்

கிழக்கு ஐரோப்பா மற்றும் ஸ்லேவிக் நாடுகளிலேயே காட்டேரிகள் பற்றிய கதைகள் அதிகம் உள்ளன. இரக்கமின்றி மனிதர்களின் இரத்தத்தினை உறிஞ்சிக் குடித்து வாழும் பலதரப்பட்ட விலங்குகளைப் பற்றி பல்வேறு கருத்துக்களை ருமேனிய, ஸ்லேவிக் நாட்டு மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

காட்டேரிகளின் உருவத்தை கண்ணாடிகளில் காணமுடியாது என்றும் அவை குறித்த கதைகளில் கூறப்படுகின்றன. சூரிய ஒளி மற்றும் சிலுவையை கண்டதும் மரண அச்சத்தில் அவை ஓடி விடுகின்றன என்றும் கூறப்படுகின்ற[illegible] அத்துடன், அவை நீண்ட கோரைப்பற்களினாலேயே இரத்தத்தை உறிஞ்சுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த புனைகதைகளின்படி, இரத்தக் காட்டேரிகளின் இதயத்தினை மரக்குச்சியால் துளைத்தால்



இளவரசன் விலட் வாழ்ந்த அரண்மனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களாக்கிய புனைகதைகள்










அவை உயிரிழப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

மனிதனிடம் நெருங்காத காட்டேரிகள் பற்றியும் இக்கதைகளில் கூறப்படுகின் றன. அவற்றினால் புகையையும் மேக மூட்டத்தையும் வரவழைக்க முடியும் என்று குறிப்பிடப்படுகின்றது. அழைப் பின்றி அவற்றால் எந்த வீட்டிற்குள்ளும் நுழையமுடியாது. அவை ஆறு, நீரோடைகளைத் தவிர்த்துச் செல்லவே விரும்புகின்றன. மேலும், ஏமாற்றத்துக்கு உள்ளாக்குவதன் ஊடாக அவற்றை அழிக்கமுடியும் என்றும் கூறப்பட்டது.

## ப்ரேம் ஸ்டோக்கர் மற்றும் ட்ரக்யூலா

'ட்ரக்யூலா' என்ற கதாபாத்திரம் இலக் கிய உலகில் சஞ்சரிக்கத் தொடங்கியதை அடுத்து, பிரித்தானியர் மற்றும் அமெரிக்க வாசகர்கள் பேரச்சம் கொள் ளத்தொடங்கினர். ட்ரக்யூலாவுக்கு உயி ரூட்டியது பிரித்தானிய எழுத்தாளர் ப்ரேம் ஸ்டோக்கர் ஆவார். அது 1897 ஆம் ஆண்டிலாகும். இந்த ட்ரக்யூலா கதாபாத்திரத்தின் கருப்பொருளாக அமைந்தது மூன்றாம் விலட் டெப்ஸ் (Vlad Tepes) எனும் ருமேனியா இளவ ரசனாவான். அவன் 15 ஆம் நூற்றாண் டில் வாழ்ந்த சிறந்ததொரு போர் வீரனாவான். எதிரிகளை வீழ்த்துவதில் வல்லவன். அவனை 'விலட் ட்ரக்யூலா' என்றும் கூறுவர். இதன் பொருள் 'ட்ரகன்களின் (ராட்சதனின்) மகன்' என்பதாகும்.

உலகில் எழுந்த இலக்கியங்களில் அச்சமூட்டும் நாவலாகவே ஸ்டோக்கரின் ட்ரக்யூலா பிரசித்தி பெற்றது. இறந்ததன் பின் சவக்குழியில் இருந்து எழும்பி வந்து உயிருடன் உள்ள மனிதர்களின் இரத்தத்தை உறிஞ்சும் காட்டேரிகள் பற்றியே இக்கதையில் குறிப்பிடப்படுகின்றது.

இந்நாவலைத் தழுவி மேடை நாடகங்கள் பல தயாரிக்கப்பட்டன. 1923 இல் மௌனப்படமாக ஜேர்மனி யில் ட்ரக்யூலா நாவல் முதன்முதலில் தயாரிக்கப்பட்டது. இதன்பின்னர், இக்கதையை அடிப்படையாகக்கொண்டு பல திரைப்படங்கள் உருவாகின. 1912 இல் ஸ்டோக்கர் உயிரிழந்தார். இறுதிக்காலத்தில் அவர் 'ட்ரக்யூலாஸ் கெஸ்ட்' என்ற பெயரில் நாவல் ஒன்றை எழுதிக்கொண்டிருந்தார். இறுதியில் அந்நாவலை ஸ்டோக்கரின் மனைவியே நிறைவு செய்தார்.

## ட்ரகன்களின் மகன்

'ட்ரகன்கள்' என்பது ருமேனியாவில் இருந்த கிறிஸ்தவ நைட்களின் பிரிவொன்றாகும். 15 ஆம் நூற்றாண்டில் கிழக்கு ஐரோப்பாவில் இஸ்லாமிய எழுச்சி ஏற்படுவதற்கு எதிராக இந்த ட்ரகன்கள் தொடர்ச்சியாகப் போராடி வந்தனர். ருமேனியர்கள் அடிக்கடி ஹங்கேரியர்கள் மற்றும் துருக்கியர்களுடன் போரிட்டு வந்தனர். இதற்குத் தலைமை தாங்கியவராக விலட் இளவரசன் இருந்தார். இதனால், அரசியல் ரீதியாக மட்டுமன்றி; மத ரீதியாகவும் அவர் பாராட்டுப் பெற்றார்.

ருமேனியாவின் தேசிய வீரராகவே அவர் கருதப்பட்டார். எதிரிகள் மீது அவர் இரக்கம் காட்டவே இல்லை. எதிரிகளைப் பிடித்து சித்திரவதை செய்து, அவர்களை இதயத்தில் மரக்குச்சியால் குத்திக் கொன்றார். போர் வெற்றியைக் கொண்டாடுமுகமாக எதிரிகளின் இரத்தத்தைக் குடிக்கும் பழக்கத்தை விலட் கொண்டிருந்ததாக கதைகளில் கூறப்படுகின்றது. இதனையே ட்ரக்யூலா கதையில் ஸ்டோக்கர் உள்ளடக்கியிருந்தார்.


## இரத்தம் குடிக்க பழகியமை

ஸ்டோக்கரின் கதை ஊடகங்களில் பிரசித்தி பெற்றதை அடுத்து, இரத்தம் குடிப்பது சிலரின் நடைமுறைப் பழக்கமாக மாறியது. இவர்களை 'சென்குய்னரியன்ஸ்' (Sanguinarians) என்று அழைக்கின்றனர். இவர்கள் மனிதரின் குரல்வளையைக் கடித்து இரத்தத்தினைக் குடிப்பவர்கள் அல்லர். மாறாக, இரத்த வங்கிகளில் இருந்து இரத்தம் பெற்று குடிக்கின்ற வழக்கத்தை இவர்கள் கொண்டிருந் தனர். ஐரோப்பாவில் இத்தகையவர்கள் தற்போதும் வாழ்ந்து வருகின்றனர்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லாவும் செல்வந்தரும்



முல்லா ஒருமுறை பெரிய செல்வந்தர் ஒருவரிடம் சென்றார். அவர் முல்லாவைப் பார்த்ததும், "முல்லா என்ன விடயம்?" என கேட்டார். அதற்கு முல்லா, "செல்வந்தர் அவர்களே, ஒருவர் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் மிகவும் துன்பப்படுகிறார். துன்பப்படும் அவருக்கு நீங்கள் ஏதாவது பொருள் உதவி செய்தால் நன்றாக இருக்கும்" என்றார்.

உடனே செல்வந்தர் சில பொற்காசுகளை முல்லாவிடம் கொடுத்துவிட்டு, "முல்லா அவர்களே! வாங்கிய கடனை அடைக்க முடியாமல் துன்பப்படும் அந்த மனிதன் யார்?" என வினவ அதற்கு முல்லா, "அந்தக் கடன்காரன் நான்தான்" எனக் கூறிக்கொண்டே வேகமாக அங்கிருந்து சென்றுவிட்டார். சில மாதங்கள் கழித்து முல்லா மீண்டும் அந்த பணக்காரர் வீட்டிற்கு வந்தார்.

முல்லாவைப் பார்த்ததும் அந்தப் பணக்காரர் "முல்லா அவர்களே! யாரோ கடன் வாங்கி விட்டு, வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாமல் துன்பப்படுகிறார் என்று சொல்லி பணம் வாங்கிச் செல்வதற்காகத் தானே இங்கு வந்துள்ளீர்" என்றார்.

"ஆமாம்" என்றார் முல்லா. அதற்கு செல்வந்தர், "வாங்கிய கடனை அடைக்க முடியாமல் துன்பப்படும் மனிதன் நீங்கள் தானே?" என்றார். அதற்கு முல்லா, "இல்லை அது ஓர் ஏழை விவசாயி" என்றார்.

"அப்படியா? அப்படியானால் அந்தக் கடனை அடைக்க முடியாமல் துன்பப்படும் மனிதர் நீங்கள் இல்லையா?" என மீண்டும் அந்தப் பணக்காரர் கேட்க அதற்கு முல்லாவும் மீண்டும் "உண்மையாக அது நான் இல்லை" என்று கூற, செல்வந்தர் உள்ளே சென்று சில பொற்காசுகளை கொண்டு வந்து முல்லாவிடம் கொடுத்தார். பின் முல்லாவைப் பார்த்து அந்த செல்வந்தர், கடன் கொடுக்க முடியாமல் துன்பப்படும் அந்த ஏழை விவசாயி மீது உங்களுக்கு ஏன் இப்படி ஓர் இரக்கம் வந்தது?" எனக் கேட்டார். அதற்கு முல்லா, "அந்த ஏழை விவசாயிக்கு கடன் கொடுத்தவனே நான்தானே" என்றார். செல்வந்தருக்கு சிரிப்பை அடக்கமுடியவில்லை.

நஜீலா நஸார்,தரம் - 8[A],
கல்கமுவ முன்னோடி
மு.ம.வித்., கல்கமுவ.

# சேமிப்பின் பயன்கள்



சேமிப்பதால் மனிதன் உயர்ச்சி அடைகின்றான். தேனீக்களும் எறும்புகளும் தமது எதிர்காலத்திற்குத் தேவையானவைகளைச் சேமிக்கும்போது மனிதன் சேமிக்காது வாழ்தல் என்பது அறிவின்மையாகும். சிறுகச் சிறுகச் சேமிப்பது ஒருநாள் பெருந்தொகையாகிவிடும். சேமிப்பவர்களை அச்சேமிப்பே காப்பாற்றும். ஊதாரித்தனமாகச் செலவு செய்யாது சிறுகச் சிறுகச் சேமிக்கும் பழக்கத்தை சிறுவயது முதல் கைக்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பது பழமொழி.

ஒருவன் தனது வருமானத்திற்கு ஏற்ப செலவு செய்யக்கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்வதற்குத் தேவையான அளவில் சிக்கனமாக பணத்தைச்செலவு செய்து வருமானத்தில் ஓரளவை மீதப்படுத்தி வைத்திருக்கவேண்டும். ஏனெனில், எமது வாழ்வில் எதிர்பாராத செலவுகள் திடீரென்று ஏற்படலாம். அவ்வேளை, நாம் சேமித்த பணம் நம்மைக் காப்பாற்றும். மற்றவர்களிடம் சென்று யாசகம் கேட்காமல் கௌரவமாக வாழ வழிகாட்டும். போலி கௌரவத்திற்காக சிலர் ஆடம்பரச் செலவு செய்து இறுதியில் அவதிப்படுகின்றார்கள். நாம் மற்றவர்களுக்கு உதவி செய்யவும் எமது சேமிப்பு வழி செய்யும். எனவேதான், எமது முன்னோர்கள் 'சிறுகக் கட்டி பெருக வாழ்' எனக் கூறியுள்ளார்கள்.

எஸ்.நிமலேஸ்வரன்,
தரம் - 9[B],
விக்னேஸ்வரா ம.வித்.,
கல்பொட, கட்டுக்கித்துளை.

# பஞ்சவர்ணக் கிளியே!



வானில் சிறகடித்து வரும்
பஞ்சவர்ணக் கிளியே!
வர்ணக் கலவையை தாங்கி
வசீகரிக்கும் கிளியே!
உனக்கு இருப்பதுபோல்
எனக்கு இல்லையே சிறகுகள்
இருந்தால் நானும் உன்போல்
சுதந்திரமாய் திரிந்திடுவேனே.

ஜே.சத்யா, தரம் - 7[G],
புனித அன்னம்மாள் ம.வித்.,
வத்தளை.

# விடுகதைகள்

1. விளக்கைச் சுமந்து வேகமாய் பறந்திடுவான் அவன் யார்?
2. விதையின்றி வளர்ந்திடுவான் வேரின்றி நின்றிடுவான் அது என்ன-?
3. நம்மைச் சுமக்கும் இவனுக்கு வீட்டிற்குள் இடமில்லை அது என்ன?
4. வெள்ளைக்காரச் சிமாட்டி நெருப்பில் கரைந்திடுவாள். அவள் யார்?
5. நம் காலில் விழுந்திடுவான் கவனமின்றி இருந்தால் நம்மைத் தூக்கி அடித்திடுவான் அது என்ன?
6. வெள்ளி உடம்புக்காரி பிடித்தால் வழுக்கி விடுவாள் அவள் யார்?
7. பந்திக்கு வரும் முந்தி வெளியே போகும் பிந்தி அது என்ன?

## விடைகள்

1. மின்மினிப்பூச்சி
2. காளான்
3. காலணி
4. மெழுகுவத்தி
5. கடல் அலை
6. மீன்
7. வாழையிலை

# விஞ்ஞானி சி.வி.ராமன்

இந்திய விஞ்ஞானி சி.வி ராமன் அவர்கள் 1888 ஆம் ஆண்டு நொவெம்பர் 07 ஆம் திகதி பிறந்தார். 'நொபெல்' பரிசு பெற்ற முதல் இந்திய விஞ்ஞானி இவரே.

அவர் கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டார். பல அறிவியல் நூல்களைக் கற்றார். பல பரிசோதனைகளைச் செய்தார். பௌதீகத்தில் முதன்மையாகத் தேறிப் பட்டம் பெற்றார். கொல்கத்தா, பர்மா, நாகபுரி போன்ற இடங்களில் பணி புரிந்துள்ளார்.

எனினும், இவரது மனம் அறிவியல் ஆராய்ச்சிகளையே நாடியது. 'கொல்கத்தா அறிவியல் வளர்ச்சிக் கழகம்' இவருக்குத் துணை புரிந்தது. 1917 ஆம் ஆண்டு கொல்கத்தா பல்கலைக்கழக பேராசிரியர் பதவி இவருக்குக் கிடைத்தது.




கடல் மற்றும் வானம் என்பன ஏன் நீல நிறத்தில் உள்ளன என்பது பற்றி ஆய்வு செய்தார். 7 வருடங்கள் ஒளிச்சிதறல்கள் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டார். ஒளிச்சிதறலில் உள்ள 7 நிறங்களில் நீலநிறம் எங்கும் பரவி வானை நீலமாக்குகின்றது எனக் கண்டறிந்தார்.அதனை 'ராமன் விளைவு' என அழைப்பர்.1928 ஆம் ஆண்டில் தனது ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டார்.

இவர் 1933 இல் பெங்களூ அறிவியல் கழகத்தின் தலைவர் பதவியைப் பெற்றார். 1949 இல் இவரே ஓர் ஆராய்ச்சிக்கழகத்தை



(Raman Research Institute) நிறுவினார்.

பல விஞ்ஞான நூல்களையும் எழுதியுள்ளார். இவர் ஆங்கிலேய அரசினால் 'சேர்' எனும் உயர்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1954 இல் இந்திய அரசினால் 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது. சி.வி ராமன் அவர்கள் 1970 இல் தனது 82 ஆவது வயதில் காலமானார்.

என்.எப்.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.

# தவறான எண்ணம்



ஒரு கழுதையும் ஒரு சேவலும் ஒரே மாட்டுக் கொட்டிலில் வசித்து வந்தன. இவை இரண்டும் மிகச் சிறந்த நண்பர்கள். ஒரு சமயம், ஒரு சிங்கம் வழிதவறி அந்த இடத்திற்கு வந்தது. கழுதையின் மீது பாய்ந்து அதைக் கொல்லப்போனது. அந்தச் சமயத்தில், தன் நண்பனைக் காப்பாற்ற எண்ணிய சேவல் மிகப்பெரிய குரலெடுத்துக் கொக்கரித்தது. சாதாரணமாகவே சிங்கங்கள் சேவலின் கொக்கரிப்பைக் கேட்டால் மிகவும் பயப்படும்.

எனவே, இந்தப் பெரிய கொக்கரிப்பைக் கேட்ட சிங்கம், கழுதையை விட்டு விட்டு ஓட ஆரம்பித்தது. இதைப் பார்த்த கழுதை, "ஒரு சேவலின் சத்தத்துக்குப் பயப்படும் இந்தச் சிங்கம் என்னை என்ன செய்துவிட முடியும். இந்த சிங்கத்தை ஒரு கை பார்க்கிறேன் பார்" எனக் கூறி மிகவும் திமிராக அச்சிங்கத்தை விரட்டிச் சென்றது. சிறிது தூரம் சென்றதும் சிங்கம் சேவலை விட்டு நெடுந்தூரம் கடந்து வந்துவிட்டோம் என்பதை உணர்ந்தது. திடீரெனத் திரும்பிப் பார்த்த சிங்கம் கழுதை தன்னைத் துரத்தி வருவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு தனக்குள் சிரித்துக்கொண்டது. கழுதை அருகில் வரும்வரை காத்திருந்த சிங்கம் அதன்மீது பாய்ந்து அதனை அடித்துக்கொன்றது. தன்னுடைய தவறான எண்ணத்தால் உயிரையே இழந்தது அந்த முட்டாள் கழுதை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது சட்டவிரோதம்



**அன்புள்ள அம்மா,**

**அம்மா என்னால் இங்கு இருக்கமுடியாது. எஜமானி என்னை மிகவும் துன்புறுத்துகிறார். என் உடம்பில் நான்கு காயங்கள் உள்ளன. கதிரைக்கு அடியில் குப்பைகள் இருந்ததாகக் கூறி என்னை இன்று காலை தும்புத்தடியால் அடித்தார். ஐயோ! அம்மா என்னை இங்கிருந்து எப்படியாவது அழைத்துச் செல்லுங்கள். நான் உங்களோடு கூலி வேலை செய்ய வருகிறேன். தம்பிகளையும் கவனித்துக் கொள்வேன் அம்மா. உடனே வாருங்கள்.**

**இப்படிக்கு,**
**உங்கள் அன்பு மகள்**
**திவ்யா.**

வீடொன்றில் வேலை செய்யும் சிறுமியொருவர் ஊரில் உள்ள தன் தாயாருக்கு அனுப்பிய கடிதம் இது. இப்படி பல சிறுவர்கள் வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டு கஷ்டப்படுகின்றனர். இது ஒரு சட்டவிரோத செயலாகும்.

"நிஷா தங்கச்சி! நிஷா தங்கச்சி!" அபிலாஸ், அரவிந்த், மயூரி ஆகியோர் நிஷா தங்கையின் வீட்டின் முன்னால் வந்து அழைத்தார்கள்.

"கொஞ்சம் பொறுங்கள். நான் வருகிறேன்" என்று நிஷா வீட்டுக்குள்ளிருந்து பதில் கூறினாள். இதை நிஷாவின் அம்மா கேட்டுக் கொண்டிருந்தார். அவர் மெதுவாக நிஷாவின் அறைக்குள் நுழைந்தார்.

"எங்கே போகப்போறாய்?"

"நான்கு பேரும் விளையாடப் போறோம்"

"விளையாடவா? காலை எழுந்ததில் இருந்து மாலை வரை உனக்கு விளையாட்டுத்தான். நிஷாவின் அம்மா உரத்துக் கத்தினார்.



"இன்று நீ விளையாடப் போவதில்லை"

"ஐயோ அம்மா!"

"ஐயோ என்றால் சரிப்பட்டு வராது. இன்றைக்கு விளையாடப் போனால் தெரியும். எனக்கு அவர்களைப் பிடிக்கவில்லை" என்று அம்மா சத்தமாக கூறினார்.

அம்மாவின் மிரட்டலை வெளியில் இருந்த அபிலாஸூம் அரவிந்தும் மயூரியும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"ஏனோ தெரியவில்லை தங்கச்சியை அவரின் அம்மா திட்டுகிறார்" என்று அரவிந்த் மயூரியிடம் கூறினான்.

"ஐயோ அம்மா அவங்க நல்லவங்க. மோசமானவர்கள் இல்லை"

"இல்லை இல்லை... எனக்குப் பிடிக்கவில்லை. போகாதே"என்று நிஷாவின் அம்மா மீண்டும் மிரட்டினார். அவள் அழுதாள்.



"அதோ நிஷா அழுகிறாள். அவளின் அம்மா நம்மை விரும்பவில்லைப்போல் இருக்கிறது. இப்போது நாம் என்ன செய்வது?" என்று மயூரி கேட்டாள்.

"அது எப்படி, குழந்தைகளுக்கு அவங்க விரும்பும் நண்பர்களோடு விளையாட உரிமை இருக்கிறதே" என்று அபிலாஸ் கூறினான்.

"ஹா... ஹா.... அது உண்மைதான். அதுவும் நல்லவர்களைக் கண்டுபிடித்து அவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்வது குழந்தைகளின் உரிமையும் பொறுப்புமாகும்" என்று மயூரி கூறினாள்.

"சரி அப்படியென்றால் நாம் கெட்ட பிள்ளைகள் என்றா சொல்கிறாய்?"

"அண்ணா, அண்ணா எங்கள் ஆசிரியை வருகிறார்.நாம் அவரிடம் இதுபற்றிச் சொல்வோம்" என்று வகுப்பாசிரியை தூரத்தில் வருவதைப் பார்த்து மயூரி சொன்னாள். அவள் ஆசிரியை வரும் பக்கம் ஓடினாள்.

"மயூரி என்ன இது?"

"டீச்சர், நிஷாவை அவளின் அம்மா எங்களோடு விளையாட வர அனுமதிக்கிறார் இல்லை. இது சிறுவர் உரிமை துஷ்பிரயோகம் தானே டீச்சர்"

"ஆம் நீ கூறுவது உண்மைதான் மயூரி"

"டீச்சர் நிஷாவின் அம்மா எங்களைக்கெட்ட பிள்ளைகள் என்று திட்டுகிறார்" என்று அரவிந்த் கூறினான்.

"நீங்கள் கெட்ட பிள்ளைகள் என்று நான் சொல்லவில்லை.ஆனால், நிஷாவின் அம்மா அப்படி நினைக்கிறார் என்றால் நம்மால் அதை மாற்றமுடியாது. சிறு பிள்ளைகளான நீங்கள் அம்மா, அப்பா சொல்வதைக் கேட்கவேண்டும். அவர்களுக்கு உங்களைவிட நல்லது கெட்டது தெரியுமல்லவா? அவற்றைக் கேட்பது உங்கள் கடமை" என்று ஆசிரியை விளங்கப்படுத்தினார். அத்தோடு மட்டும் நிற்காமல் டீச்சர் நிஷாவின் அம்மாவிடமும் சென்றார். அபிலாஸ், அரவிந்த், மயூரி ஆகியோர் நல்லபிள்ளைகள் என்று நிஷாவின் அம்மாவிடம் ஆசிரியை சொன்னபின் அதை எதிர்த்து அவர் எதுவும் சொல்லவில்லை.

"எனக்குத் தெரியாது இக்குழந்தைகள் இந்தளவுக்கு வகுப்பில் நன்றாகப் படிப்பவர்கள் என்று. அப்படியென்றால் பரவாயில்லை" என்று நிஷாவை அவர்களுடன் விளையாட அம்மா அனுமதித்தார்.

## சிறுவர் உரிமைகள் பற்றிய பாடம்

### சிறுவர் உரிமைகள் என்றால் என்ன?

மனித உரிமைகள் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் அல்லவா? அங்கு அனைத்து மக்களைப் பற்றியும் பேசப்படுவதுண்டு. இருந்தாலும் பெரியவர்களோடு செயலாற்றும்போது பலர் சிறார்களை மறந்து விடுகின்றனர். இதனால்தான் 'சிறுவர் உரிமைகள்' எனும் கருத்து உருவாகியது. உண்மையில் இது நன்மையானதே. இல்லாவிட்டால் குழந்தைகளின் வாழ்க்கை மிகக் கஷ்டமானதாக இருந்திருக்கும்.

சிறுவர் உரிமை பற்றிப் பேசும்போது முக்கியமானது ஐ.நா. அமைப்பின் சிறுவர் உரிமைகள் பற்றிய சாசனமாகும். சாசனம் என்ற சொல் சற்றுக் கடினமானது. எனக்கு இது சரியாகப் புரிவதில்லை. நான் அதனை எமது 'உரிமைகள் பற்றிய புத்தகம்' என்றழைப்பதுண்டு. எனினும், அது புத்தகம் அல்ல. இதன் பெயர் பற்றி அக்கறை காட்டுவதைவிட அதில் எழுதப்பட்டுள்ள விடயங்கள்தான் முக்கியமானதாகும்.

இங்கு உரிமைகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. வாழும் உரிமை
2. வளரும் உரிமை
3. பாதுகாத்துக்கொள்ளும் உரிமை
4. பங்குபற்றும் உரிமை





அங்.இல: 3529

ந.வதனி,
தரம் - 3B,
புனித தெரேசாள் ம.கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3530

எம்.ஸஹாத், தரம் - 1D,
புனித அந்தோனியார் ஆ.கல்.,
கடுகஸ்தொட்ட.



அங்.இல: 3531

எஸ்.சிவசுதன், தரம் - 5,
ஆனைப்பந்தி மெ.மி.வித்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3532

எம்.சம்லா,
தரம் - 7T,
முஸ்லிம் ம.கல்.,
காலி.



அங்.இல: 3533

எம்.அஸ்ஜத்,
தரம் - 2A,
அந்நூர் தே.பாட.,
மட்டக்களப்பு.



அங்.இல: 3534

எஃப்.ரிஃபாத்,
தரம் - 8A,
பாத்திமா பா.மு.வித்.,
புத்தளம்.



அங்.இல: 3535

சி.அரவிந்ராஜ்,
தரம் - 9C,
ஹாட்லிக் கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3536

ஆர்.ஷாஜினி,
தரம் - 9A2,
விபுலானந்தாக் கல்.,
வவுனியா.

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3537

கு.நிருஜன்,
தரம் - 11G,
கொக்குவில் இ.கல்.,
கொக்குவில்.



அங்.இல: 3538

எச்.முஜாஹிட்,
தரம் - 9B,
அல்-அமீன் ம.வித்.,
சம்மாந்துறை.



அங்.இல: 3539

க.கஜந்தன்,
தரம் - 10,
யா/யூனியன் கல்.,
தெல்லிப்பளை.



அங்.இல: 3540

வி.பதீபன்,
உயர் தரம்,
ஸ்ரீ சோமஸ்கந்தா கல்.,
புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுளை, எலதலுவ கதிரேசன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற சிவராத்திரி விழாவில் பங்கேற்ற என்.யதர்சனாவின் பரத நாட்டிய அரங்கேற்றத்தின் ஒரு காட்சியையே படத்தில் காண்கின்றீர்கள்.



(தகவல்: வி.சுப்பிரமணியம்)



மூல்/புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவி இ.யாழ்நிலா, 2009 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர், இரஞ்சித்குமார்-பிறின்சி தம்பதியரின் புதல்வியாவார்.



கெகுணகொல்ல, நிதுள்ளகஹப்பிட்டியைச் சேர்ந்த அப்துல் கலாம்-நுஸ்ரா தம்பதியரின் அன்பு மகன் முஹம்மட் அப்ஸான், 17.04.2010 அன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் நலமாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல் : குடும்பத்தினர்)

புளத்சிங்கள, கோவில் வீதியைச் சேர்ந்த செல்வன்-ஜெயா தம்பதியரின் செல்வப் புதல்வி கெத்ஷியா டிவோனா, 18.04.2010 அன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர், உறவினர்கள் அனைவரும் யேசுவின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.








தம்பலகமம்-பொற்கேணியைச் சேர்ந்த அருணகிரி-இந்திராணி தம்பதியரின் புதல்வர்களான நிதேஷனா-நிதேஷனன் ஆகிய இருவரும் 26.04.2010 அன்று தமது ஐந்தாவது பிறந்ததினத்தைக் கொண்டாடவுள்ளனர். இவர்களை குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் திருமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் அருள் பெற்று, ஆதிகோணநாயகர் ஆசியுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல் : ஏ.பிரவீணன்)


# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

## சித்திரைப் புத்தாண்டு




பி.எனஸ் போல், தரம் - $10^{B}$,
இ/காவத்தை நவோத்யா
த.ம.வித்., காவத்தை.

## கார்



ரா.ரூஎல்,
தரம் - $5^{M}$, புனித மிக்கேல் கல்.,
மட்டக்களப்பு.



பாத்திமா றிபாஸா,
தரம் - 5, வெலித்தர மு.வித்.,
பலப்பிட்டிய

## ஆடும் குட்டியும்



சுப்னா நவாஸ், தரம் - 9,
கே/கராகொடை மு.ம.வித்.,
கராகொடை.

## கார்ட்டூன் கதாபாத்திரம்



எஃப்.ஜோரா,
தரம் - 7, கே/தல்துவ மு.ம.வித்.,
தல்துவ.



எஃப்.மிஸ்தா,
தரம் - $8^{G}$, மின்ஹாத் தே.பாட.,
மாத்தறை.

## தாமரைக் குளம்



எம்.எச்.எம்.யாசிர்,
தரம் - $8^{G}$, காத்தான்குடி ம.கல்.,
காத்தான்குடி.




முஹமட் சதூக்,
தரம் - $6^{B}$,
தில்லையடி மு.ம.வித்.,
புத்தளம்.

## வண்ணத்துப் பூச்சி



க.கிஷோஜனா, தரம் - 5,
பூம்புகார் கண்ணகி வித்.,
வவுனியா.



உ.கோகிலப்பிரியா,தரம் - 2,
யா/மானிப்பாய் சோதி வேம்படி
வித்., மானிப்பாய்.




பாத்திமா ருகையா,
தரம் - 3, தெலம்புகல்ல மு.வித்.,
தெலம்புகல்ல.



பாத்திமா இல்மா, தரம் - 4,
முஸ்லிம் ம.கல்., கொழும்பு-04.




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



நட்டாஷா ஐவொனி,
தரம் - $4^{B}$,
ஹைலன்ஸ் ம.கல்.,
ஹட்டன்.



எஸ்.சமன்ராஜ்,
தரம் - $7^{A}$, எக்பர்த் த.வித்.,
சூரியகந்த.



எஃப்.நஸ்மா, தரம் - $9^{B}$,
க/தெஹியங்க
அல்-அஸ்ஹர் ம.கல்.,
தெஹியங்க.



எஃப்.நஸ்ரினா,
தரம் - $8^{A}$,
யஹலத்தன்னை
மு.ம.வித்.,
யஹலத்தன்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முட்டைகளிலிருந்து வெளிவந்த இளைஞர்கள்



முன்னொரு காலத்தில் முதியவர் ஒருவரும் மூதாட்டி ஒருவரும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வேட்டையாடியே வாழ வேண்டியிருந்தது. பல ஆண்டுகள் ஏழைகளாகவே அவர்கள் வாழ்ந்தார்கள். இதனால், மூதாட்டி வருந்தவும் துயருறவும் செய்தாள்.

''என்ன இழிவான வாழ்க்கை வாழ்கிறோம்: நல்ல உணவும் இல்லை, நல்ல உடையும் இல்லை. நமக்குக் குழந்தைகளும் இல்லை. நமது வயதான காலத்தில் நம்மைப் பார்த்துக் கொள்ள ஒருவரும் இல்லை'' என்று அடிக்கடி சொன்னாள்.

''நீ துயரப்படாதே. எனக்கு கைகளும் கால்களும் இருக்கின்றவரை நமக்கு உண்ணப் போதுமான உணவு கிடைக்கும். எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்'' என்று முதியவர் ஆறுதல் சொன்னார். இவ்வாறு கூறிவிட்டு முதியவர் வேட்டைக்குச் சென்றுவிட்டார்.

காலை முதல் மாலை வரை முதியவர் காட்டில் அலைந்து திரிந்தார். ஆனால், பறவையோ, விலங்கோ ஒன்று கூடக் கிடைக்கவில்லை. எனினும், வெறுங் கையுடன் வீடு திரும்ப அவர் விரும்பவில்லை. ஆனால், அவரால் என்னதான் செய்யமுடியும்? சூரியன் மறைந்து கொண்டிருந்தது. வீடு திரும்ப நேரம் ஆகிவிட்டது.

அப்போது அருகில் இறக்கை படபடப்பது கேட்டது. பக்கத்திலிருந்த புதரிலிருந்து அசாதாரண அழகுள்ள பறவை ஒன்று வெளியே பறந்து வந்தது. அதற்குக் குறி வைப்பதற்குள் அது பறந்து போய்விட்டது.

''அதிர்ஷ்டமில்லாத வேட்டைக்காரன் நான்'' என்று முதியவர் பெருமூச்சுவிட்டார். பறவை இருந்த புதருக்குள் உற்றுப்பார்த்தார். அக்கூட்டில் முப்பத்து மூன்று முட்டைகள் கிடந்தன.

''ஒன்றுமில்லாததற்கு இது பரவாயில்லை'' என நினைத்தார் முதியவர்.

தன் இடைவாரை இறுக்கி, முப்பத்து மூன்று முட்டைகளையும் சட்டைக்குள் போட்டுக்கொண்டு வீடு திரும்பினார். மென்மேலும் நடந்து செல்கையில், அவரது இடைவார் அவிழ்ந்து, முட்டைகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கீழே விழத்தொடங்கின.

ஒரு முட்டை கீழே விழ, அதில் இருந்து ஓர் இளைஞன் குதித்து வெளியே வந்தான். மற்றொரு முட்டை கீழே விழ, மற்றொரு இளைஞன் குதித்து வெளியே வந்தான். முப்பத்திரண்டு முட்டைகள் கீழே விழுந்து, அவற்றில் இருந்து முப்பத்திரண்டு இளைஞர்கள் குதித்து வெளியே வந்தார்கள்.

ஆனால், அந்நேரத்தில் முதியவர் தனது இடைவாரை இறுக்கிக் கட்டவே, முப்பத்துமூன்றாவது முட்டை அங்கேயே தங்கிவிட்டது. முதியவர் திரும்பிப் பார்த்தார்; தன் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. அவரை பின்பற்றி முப்பத்திரண்டு இளைஞர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அனைவரும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டவர்களைப் போலிருந்தனர்.

ஒரே குரலில் எல்லோரும் பேசினார்கள்;

''நீங்கள் எங்களைக் கண்டுபிடித்ததால் இப்போது நீங்கள்தான் எங்கள் தந்தை. நாங்கள் உங்களது புதல்வர்கள். இப்போதே உங்கள் வீட்டுக்கு எம்மை கூட்டிச் செல்லுங்கள்'' என்றார்கள்.

''எனக்கும் என் மனைவிக்கும் எவ்வளவு அதிர்ஷ்ட நாள் இது! இத்தனை ஆண்டுகளாகியும் ஒரு குழந்தைகூட எமக்குக் கிடையாது. இப்போது முப்பத்திரண்டு மகன்கள்'' என்று முதியவர் நினைத்தார்.

அவர்கள் வீட்டை அடைந்ததும் முதியவர் சொன்னார்; ''இத்தனை ஆண்டுகளாக குழந்தைகள் வேண்டுமென்று ஏங்கினாய், அழுதாய், இல்லையா? இதோ! உனக்கு முப்பத்திரண்டு மகன்களைக் கொண்டு வந்திருக்கிறேன். அனைவரும் ஆணழகர்கள். இப்போது அவர்களுக்கு உணவு பரிமாறு''

அவர்களை எப்படிக் கண்டு பிடித்தேன் என்பதை முதியவர் அவளிடம் சொன்னார். மூதாட்டி அசையாது நின்றாள். ஒரு வார்த்தைகூடப் பேசமுடியவில்லை. சிறிது நேரம் இவ்வாறு நின்ற அவள், உணவு பரிமாற விரைந்தாள். அப்போது முதியவர் தன் இடைவாரைத் தளர்த்தி, மேற்சட்டையைக் கழற்ற இருந்தபோது, முப்பத்து மூன்றாவது முட்டை கீழே விழுந்து, அதிலிருந்து இளைஞன் ஒருவன் குதித்து வெளிவந்தான்.

''எங்கிருந்து நீ வருகிறாய்?''

''நான்தான் இவான். உங்களுடைய கடைசி மகன்''

பறவைக்கூட்டில் தான் முப்பத்திமூன்று முட்டைகளை எடுத்ததை முதியவர் நினைவுகூர்ந்தார்.

''நல்லது இவான், சாப்பிட உட்கார்''

முப்பத்துமூன்று இளைஞர்களும் சாப்பிட உட்கார்ந்தவுடன் அனைத்து உணவுகளையும் உடனே காலி செய்துவிட்டார்கள். இதனால், உணவு மேசையை விட்டு அரை வயிற்றுடன் எழுந்தார்கள். பின்னர் தூங்கச் சென்றார்கள். காலையில் இவான் சொன்னான்;

''தந்தையே! நீங்களே எங்களைக் கண்டுபிடித்தீர்கள். இப்போது எங்களுக்கு ஏதாவது வேலை தாருங்கள்''

''சிறுவர்களே, உங்களுக்கு என்ன மாதிரி வேலை என்னால் தரமுடியும்? என் மனைவியும் நானும் எங்கள் வாழ்நாளில் உழுததும் இல்லை, விதைத்ததும் இல்லை. எங்களிடம் குதிரையோ, கலப்பையோ இருந்ததில்லை''

''சரி உங்களிடம் இல்லை என்றால் ஒன்றும் செய்யமுடியாது. வேலை தேடி வேறு ஆட்களிடம் போகிறோம். இப்போது கொல்லனிடம் போய் எங்களுக்கு முப்பத்துமூன்று அரிவாள்களை வாங்கி வாருங்கள்'' என்றான் இவான்.

அரிவாள்கள் அடித்து வாங்க முதியவர் பட்டறைக்குச் சென்றார். இதற்கிடையில், இவானும் அவனது சகோதரர்களும் அரிவாள்களுக்கான முப்பத்துமூன்று கைப்பிடிகளையும் முப்பத்துமூன்று வாருகோல்களையும் செய்தனர்.

முதியவர் பட்டறையிலிருந்து திரும்பியதும், இவான் தனது சகோதரர்களுக்குக் கருவிகளைப் பகிர்ந்து கொடுத்துவிட்டுச் சொன்னான்;


''வாருங்கள், சகோதரர்களே, நாம் ஏதாவது வேலை செய்து, பணம் சம்பாதித்து எமது வயதான பெற்றோர்களைக் கவனித்துக்கொள்வோம்'' என்றான்.

சகோதரர்கள் பெற்றோரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள். அவர்கள் சிறிது தூரம் சென்றபின்னர் இறுதியில் ஒரு பெரிய நகரத்தை அடைந்தார்கள். அந்நகரில் அரசருடைய கண்காணி குதிரையில் வந்து கொண்டிருந்தான். (தொடரும்....)

# அன்புப் பரிசு

அன்று தமிழ் ஆசிரியர் சாமிநாதன் ஓய்வு பெறும் நாள். அவர் நல்ல திறமைமிக்க ஆசிரியர். அவர் தம்மீது ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்படும்படி பாடங்களை நடத்துவார். அவர் சரியாகப் படிக்காத மாணவர்களை நீதிக் கதைகள் கூறித் திருத்துவார். ஆசிரியர் சாமிநாதனின் வகுப்பில் செந்தில் என்று ஒரு மாணவன் இருந்தான். பாடம் நடத்தும்போது அவன் மற்ற மாணவர்களுடன் அரட்டை அடிப்பான். வீட்டிலும் பெற்றவர்களுக்கு அடங்கி நடப்பதில்லை.

ஆசிரியர் சாமிநாதனும் எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்தார். ஆனால், செந்தில் திருந்தவில்லை அன்று கடைசி நாளும் ஆசிரியர் சாமிநாதன் வகுப்புக்கு வந்தார். மாணவர்களுக்கு வாழ்த்துக் கூறிப் பேசிக் கொண்டிருந்தார். அப்போது வகுப்புத் தலைவன் எழுந்தான்




''ஐயா நாங்கள் எங்கள் சக்திக்கு உட்பட்டு தங்களுக்கு ஒரு நினைவுப் பரிசு வழங்க ஆசைப் படுகிறோம். பெற்றோர் எங்களுக்கு செலவுக்குக் கொடுத்த பணத்தில் சேமித்துத்தான் பரிசுப் பொருட்களை வாங்கி உள்ளோம். எனவே நாங்கள் பெற்றோரைத் தொந்தரவு செய்து வாங்கிவிட்டோம் என்று நினைத்துத் தாங்கள் இதனை மறுக்கக் கூடாது,

'ராஜா, உங்கள் நல்ல எண்ணத்துக்கு நன்றி. ஆனால், நினைவுப் பரிசு வேண்டாம், அதில் எனக்கு இஷ்டம் இல்லை'' என்று நிராகரித்தார் சாமிநாதன்.

உடன் அனைத்து மாணவர்களும் எழுந்து நின்றனர். ''ஐயா, நீங்கள் எங்களின் நினைவுப் பரிசை ஏற்காதவரை நாங்கள் இருக்கையில் அமர மாட்டோம்'' என்று பிடிவாதமாக ராஜா கூற, மற்ற மாணவர்கள் தலையசைத்து அதனை ஆமோதித்தனர். ஆசிரியர் யோசித்தார், சிறுவர்களின் அன்பு நெஞ்சம் வருத்தம் அடையக்கூடாது என்று நினைத்தார்.

பின் ஒரு நிபந்தனையின் பேரில் நினைவுப் பரிசை ஏற்பதாக அவர் தெரிவித்தார். அதாவது.

''நீங்கள் கொடுக்கும் நினைவுப்பரிசை அதைத் தேவைப்படுபவர்களுக்கு நான் கொடுத்துவிடுவேன். சம்மதமா?'' என்று கேட்க, அனைவரும் சம்மதம் என்று கூறி, தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக கைகளைத் தட்டி அமர்ந்தார்கள். அன்று மாலை ஆசிரியர் சாமிநாதன், மாணவர்கள் கொடுக்கும் ஒவ்வொரு பரிசையும் அவர்களின் ஆசைக்காக வாங்கி அவர்களை தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தார், அவரவர் தன் சக்திக்கேற்ப சுவாமிப் படம், பேணாக்கள், டைரி, புத்தகங்கள் என்று கொடுத்து அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தனர்.

இறுதியாக செந்தில் வந்தான். அவன் தன் நினைவுப் பொருளாக கவர் ஒன்றை நீட்டினான், ஆசிரியர் செந்தில் கொடுத்த கவரைப் பிரித்தார், அதில் ஒரு கடிதம் இருந்தது.

''ஐயா, என்னை மன்னியுங்கள். நான் எவ்வளவோ தவறுகள் செய்திருக்கிறேன். தாங்களும் எனக்கு எவ்வளவோ புத்திமதிகள் கூறியும் நான் திருந்தவில்லை. ஆனால் தாங்கள் இருக்கும்போது உணராத ஒன்றை என் மனம் இப்போது நினைத்து ஏங்குகிறது. தாங்கள் ஒய்பெற்றுச் சென்றாலும் என்னைப் பொறுத்தவரை ஒரு பெரும் அறிவுச் செல்வத்தை இழந்ததாக கருதுகிறேன். அவரவர் தங்கள் பெற்றோர் கொடுத்த பணத்தில் உங்களுக்குப் பரிசுப் பொருள்களைக் கொடுத்தனர்.ஆனால் நான்தான் பொக்கெட் செலவுக்கு அப்பாவின் பொக்கெட்டில் இருந்தே பணத்தைத் திருடுபவன். நான் பணம் எதுவும் சேமித்து வைக்கவில்லை. உங்களுக்கு நான் என்ன கொடுப்பது என யோசித்தேன். தீர்மானித்தேன், ஒரு திடமான முடிவெடுத்தேன். ஆமாம் ஐயா, இன்று முதல் நான் ஒழுங்கான திருந்திய மாணவனாக இருப்பேன். பாடங்களை ஒழுங்காகப் படிப்பேன். எப்போதும் பொய் சொல்ல மாட்டேன். தேவையில்லாத ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பதோடு அல்லாமல் பெற்றவர்கள் மனம் மகிழும் வண்ணம் நல்ல பிள்ளையாக இருப்பேன். இந்த உறுதிமொழியை என் பரிசாக இந்தக் கடிதம் வாயிலாகத் தருகிறேன் ஐயா! தயவு செய்து இதனை ஏற்று என்னை மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை கூறுங்கள்''. ஆசிரியர் கண்ணீரை தன் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் நாம் கமலுக்கும் அம்மாவுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

කමල්: අම්මේ මගේ පුහුණුවීමේ කාලය අදින් ඉවරයි.
அம்மே மகே புஹுனுவீமே காலய அதின் இவரய்.
கமல்: அம்மா இன்றுடன் என்னுடைய பயிற்சிக்காலம் முடிந்துவிட்டது.

අම්මා: ආ... ඇත්තද පුතා. දැන් පුතාට එතනම රැකියාව ලැබෙනවාද?
ஆ.... எத்தத புதா. தென் புதாட எதனம ரெகியாவ லெபெனவாத?
அம்மா: ஆ... உண்மையா மகன். இப்போது மகனுக்கு அங்கேயே தொழில் கிடைக்குமா?

කමල්: නැහැ අම්මේ. මාව වෙන ශාඛාවකට මාරු කළා.
நெஹே அம்மே. மாவ வென ஷாகாவகட மாறு கலா.
கமல்: இல்லை அம்மா. என்னை வேறு ஒரு கிளைக்கு மாற்றி உள்ளார்கள்.

අම්මා: ඒ කොහේටද පුතා?
ஏ கொஹேடத புதா?
அம்மா: அது எங்கே மகன்?



කමල්: පුත්තලමට අම්මේ.
புத்தளமட அம்மே.
கமல்: புத்தளத்திற்கு அம்மா.

අම්මා: ආ... ඇත්තද පුතා? ඉතින් පුතාට හරි දුරනේ. යන්න එන්නේ කොහොමද?
ஆ... எத்தத புதா? இதின் புதாட ஹரி துரனே. யன்ன என்னே கொஹொமத?
அம்மா: உண்மையா மகன்? மகனுக்கு மிகவும் தூரம்தானே. போய் வருவது எப்படி?

කමල්: ඒක තමා ප්‍රශ්නෙ අම්මේ.
ஏக தமா பிரஷ்னே அம்மே.
கமல்: அதுதான் பிரச்சினை அம்மா.

අම්මව දාලා යන්නත් බැහැ. මගේ යාලුවෙක් පුත්තලමේ ඉන්නවා.
அம்மவ தாலா யன்னத் பெஹெ. மகே யாலுவெக் புத்தளமே இன்னவா.
அம்மாவை விட்டு போகவும் முடியாது. என்னுடைய நண்பன் ஒருவன் புத்தளத்தில் இருக்கிறான்.

අපි එහෙන් ගෙයක් කුලියට ගන්න බලමු.
அபி எஹென் கெயக் குலியட கன்ன பலமு.
நாங்கள் அங்கே ஒரு வீட்டை வாடகைக்கு எடுக்கப் பார்ப்போம்.

අම්මා: ඒක හොඳයි පුතා. මට තනියම ඉන්නත් බැහැනේ.
ஏக ஹொந்தய் புதா. மட தனியம இன்னத் பெஹெனே.
அம்மா: அது நல்லது மகன். எனக்குத் தனியாக இருக்கவும் முடியாதுதானே.

කමල්: මම හෙට ගිහින් යාලුවව බලන්නම්.
மம ஹெட கிஹின் யாலுவவ பலன்னம்.
கமல்: நான் நாளைக்குப் போய் நண்பனைப் பார்க்கிறேன்.



අම්මා: හොඳයි පුතා.
ஹொந்தய் புதா.
அம்மா: நல்லது மகன்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* என்னுடைய நண்பன் ஒருவன் புத்தளத்தில் இருக்கிறான்.
මගේ යාලුවෙක් පුත්තලමේ ඉන්නවා.

i. என்னை வேறு ஒரு கிளைக்கு மாற்றி இருக்கிறார்கள்.
..............................................................................

ii. நாங்கள் ஒரு வீடு வாடகைக்கு எடுக்கப் பார்ப்போம்.
..............................................................................

iii. நான் நாளைக்குப் போகிறேன்.
..............................................................................






**He, She, It** முதலான பிரதிப் பெயர்ச்சொற்களை (Pronouns) எழுவாய் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட, இறந்தகால தனி வாக்கியம் மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் ஆகிய இரண்டு வகை வாக்கியங்களிலும் காணப்படுகின்ற, எதிர்மறை நிலையில் (Negative) உள்ள வாக்கியங்களை மேலும் இங்கே பயில்வோம்.

| Past Simple Tense<br>இறந்தகால தனி வாக்கியம் | Present Simple Tense<br>நிகழ்கால தனி வாக்கியம் |
|---|---|
| (அ) He did not tell.<br>அவன் சொல்லவில்லை. | (ஆ) He does not tell.<br>அவன் சொல்லுவதில்லை. |
| (இ) She did not start.<br>அவள் ஆரம்பிக்கவில்லை. | (ஈ) She does not start.<br>அவள் ஆரம்பிப்பதில்லை. |
| (உ) It did not bark.<br>அது குரைக்கவில்லை. | (ஊ) It does not bark.<br>அது குரைப்பதில்லை. |

(அ) He did not tell a lie yesterday.
அவன் நேற்று பொய் (ஒன்றை) சொல்லவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) He does not tell a lie at all.
அவன் ஒருபொழுதும் பொய் (ஒன்றை) சொல்வதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(இ) She did not start her work on time yesterday.
அவள் நேற்று தனது வேலையை உரிய நேரத்தில் ஆரம்பிக்கவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஈ) She does not start her work on time at all.
அவள் தனது வேலையை ஒருபொழுதும் உரிய நேரத்தில் ஆரம்பிப்பதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(உ) It did not bark last night.
அது கடந்த இரவு குரைக்கவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஊ) It does not bark at night.
அது இரவில் குரைப்பதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

* மேலும் சில வாக்கியங்கள் இதோ;

(அ) Ragavan did not tell a lie yesterday.
ராகவன் நேற்று பொய் (ஒன்றை) சொல்லவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) Ragavan does not tell a lie at all.
ராகவன் ஒருபொழுதும் பொய் (ஒன்றை) சொல்வதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(இ) Ranjini did not start her work on time yesterday.
ரஞ்ஜினி நேற்று தனது வேலையை உரிய நேரத்தில் ஆரம்பிக்கவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஈ) Ranjini does not start her work on time at all.
ரஞ்ஜினி ஒருபொழுதும் தனது வேலையை உரிய நேரத்தில் ஆரம்பிப்பதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

(உ) This dog did not bark last night.
இந்த நாய் கடந்த இரவு குரைக்கவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஊ) This dog does not bark at night.
இந்த நாய் இரவில் குரைப்பதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புகள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்கு பெறுமதிமிக்க பாடசாலை உபகரணங்கள் சிலோன் பென்சில் நிறுவனத்தால் (அற்லஸ்) பரிசாக வழங்கப்படும்.

# அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

## ஈராக் தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றி

ஈராக் நாட்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி, ஆளும் கட்சி எதிர்க்கட்சியிடம் தோல்வியடைந்துள்ளது. பிரதமர் நூர் அல் மலிக்கின் 'ஸ்டேட் ஒஃப் லோ' என்ற முன்னணியே இவ்வாறு முன்னாள் பிரதமர் இஸாத் அலாவியின் கட்சியிடம்



தோல்வியடைந்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 7 ஆம் திகதி மேற்படி தேர்தல் நடைபெற்றது.

தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளில் 'ஸ்டேட் ஒஃப் லோ' கட்சிக்கும் ஆளும் 'இராக்கியா' கட்சிக்குமிடையே பிரதான போட்டி நிலவியது.

இருப்பினும், இந்த கட்சிகளில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மையை பெறக்கூடியவாறு 161 ஆசனங்களைப் பெறமுடியவில்லை.

ஆளும் கட்சிக்கு 89 ஆசனங்களும் எதிர்க்கட்சிக்கு 91 ஆசனங்களுமே கிடைத்துள்ளன.

## தென்கொரிய கப்பல் கடலில் மூழ்கியது




தென் கொரியாவிற்குச் சொந்தமான போர் கப்பலொன்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிப்பு சம்பமொன்றின் காரணமாக அக்கப்பல் கடலில் மூழ்கியது.

இச்சம்பவத்தினால் கப்பலில் இருந்த 46 பேர் காணாமல் போயுள்ளனர். 1,200 தொன் எடையை கொண்ட இந்த கப்பலில் 104 கடற்படை வீரர்கள் பயணம் செய்துள்ளனர். கப்பல் கடலில் மூழ்கிய தகவல் கிட்டியதையடுத்து, மீட்புப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக படையினர் 58 பேரை காப்பாற்ற முடிந்தது. காப்பாற்றப்பட்டோரில் கப்பலின் மாலுமியும் அடங்குகின்றார்.

## பிரான்ஸ் ஜனாதிபதி எதிர்ப்புத் தினம்




பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சார்கோஸுக்கு எதிராக எதிர்ப்பு ஊர்வலமொன்று பிரான்ஸின் தலைநகர் பெரிஸ் நகரில் நடைபெற்றுள்ளது.

சார்கோஸி எதிர்ப்பு தினம் என்றே அன்றைய தினத்தை எதிர்ப்பாளர்கள் பெயரிட்டிருந்தனர்.

இணையத்தின் வழியே ஒன்றிணைக்கப்பட்ட சமூக நல விரும்பிகளினாலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பிரான்ஸ் ஜனாதிபதியின் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு எந்தவொரு நிவாரணங்களையும் வழங்கவில்லை என்று அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற பிரதேச சபைத் தேர்தலிலும் ஜனாதிபதி சார்கோஸின் கட்சி பாரிய தோல்வியை அடைந்துள்ளது.

பிரான்ஸில் ஜனாதிபதித் தேர்தல் 2012 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது. இத்தகைய நிலையில் ஜனாதிபதி சார்கோஸின் புகழ் நாளுக்கு நாள் குறைவடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

### அற்லஸ் கேள்வி - 252

**கேள்வி:** ஈராக் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள கட்சித் தலைவரின் பெயர் என்ன?

சரியான விடை........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே<br>
உலகைக் காண்போம், கேள்வி - 252,<br>
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 250 இன் சரியான விடை: ஜேர்மனி**

பரிசு பெறுவோர்

உமர்ஷுக்ரி,<br>
41, கலகெதர மடிகே,கண்டி.

ஹம்தா பானு லியாவுடீன்,<br>
33A, முஸ்லிம் பள்ளி ஒழுங்கை, நாவல வீதி, ராஜகிரிய.

ம.ஆரணி,<br>
மே/பா மகேஸ்வரன், சோமராம் தோட்டம்,<br>
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.



## நொபெல் சமாதான விருதிற்கு இணைய சேவை பரிந்துரை

இந்த வருடத்திற்குரிய நொபெல் சமாதான பரிசிற்கான பரிந்துரை செய்யும் பெயர் பட்டியல் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவு பெற்றுள்ளது. இம்முறை நொபெல் சமாதான விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ள 237 பெயர்ப்பட்டியலில் இணைய சேவையும் இடம்பெற்றுள்ளது.

இணைய சேவையானது இந்தளவிற்கு உலகமயமாவதற்கும் உச்சநிலைப் பயனை வழங்குகின்றமைக்கு காரண கர்த்தாக்களாக இருந்த முக்கிய நபர்கள் மூன்று பேரின் பெயர்களும் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இணையத்தின் தந்தையாக கருதப்படும் வின்ட் சர்ஃப், உலகமயமாக்கிய டிம் பர்னர்ஸ் மற்றும் லெரி ரொபர்ட்ஸ் ஆகியோரே அந்த மூன்று பேருமாவர்.

'நொபெல்' சமாதான விருதுக்காக பரிந்துரைக்கப்படுகின்ற பெயர் பட்டியலிலிருந்து விருதுக்குரியவர்களைத் தெரிவு செய்வதற்காக விசேட குழுக்கள் பல அமைக்கப்பட்டிருக்கும் இந்தக் குழுக்களில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஏற்கனவே நொபெல் பரிசு வென்றவர்கள் ஆகியோரும் அடங்கியிருப்பர். இணைய சேவைக்கு 'நொபெல்' சமாதான விருது வழங்கப்பட வேண்டும் என்று கருதப்படுபவரில் 'வன் லெப்டொப் பேர் சைல்ட்' (OLPC) அமைப்பின் தலைவரான நிக்கலஸ் நொக்ரொபொன்டே என்பவரும் அடங்குகின்றார். 2003ஆம் ஆண்டில் நெபெல் சமாதான விருதினைப் பெற்ற ஈரானைச் சேர்ந்த ஷிரின் இபாதி என்பவரும் இதற்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார். தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள பட்டியலின்படி மேற்படி விருது யாருக்கு வழங்கப்படும் என்பது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி வெளியிடப்படும் என்று நொபெல் நிறுவனத்தின் பணிப்பாளர் லன்டஸ்டெட் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 40 வருடங்களில் கடந்து வந்த பாதையை பார்க்கையில் இணைய சேவையானது சர்வதேச அளவில் உன்னதமான தொடர்புச் சேவையை வழங்கியுள்ளதுடன், உலக நாடுகளுக்கிடையே நல்லதோர் இணைவையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம். எனவே, இதற்கமைய, இணைய சேவைக்கு இந்த வருடத்திற்கான நொபெல் சமாதான விருது வழங்கப்படலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்பந்தாட்டத்தில் உருவாகிய றகர் போட்டி



**இலங்கையில் பாடசாலை மட்டத்திலும் றக்பி (றகர்) விளையாட்டுக்கள் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளன. இலங்கையில் தற்போது கிட்டத்தட்ட 70 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் றகர் விளையாட்டுக்கள் நடைபெற்று வருகின்றன. அவ்வாறே, இலங்கை பூராவும் ஆயிரக்கணக்கிலான றகர் ரசிகர்களும் காணப்படுகின்றனர். உலக அளவிலும் றகர் விளையாட்டிற்கு ஏராளமான ரசிகர்கள் உள்ளனர் எனலாம்.**

இந்த விளையாட்டின்போது, போட்டியாளர்கள் அடிக்கடி ஒருவரையொருவர் முட்டி மோதிக்கொள்கின்ற சந்தர்ப்பங்கள் எழுகின்றபடியால் அதனையிட்டு கடுமையான போட்டி விதிமுறைகளும், ஒழுக்க விதிமுறைகளும் இதில் கையாளப்படுகின்றன.

அதன்படி, இத்தகைய றகர் விளையாட்டைப் பற்றி நீங்கள் அறிந்திராத பல தகவல்களை இந்த வார 'ஸ்போர்ட்' பகுதியில் உங்களுக்குத் தருகின்றோம்.

## ஆரம்பம்

றகர் விளையாட்டு 1823 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அறிமுகமாகியது. குறித்த வருடம் நொவெம்பர் மாதம் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இதில் கால்பந்தாட்டப் போட்டியும் நடைபெற்றது. இப்போட்டியின்போது, எதிரணியின் 'கோல்' எல்லைக்குப் பந்தினை கால்களால் தட்டிச் செல்லவேண்டிய வில்லியம் எலிஸ் என்ற போட்டியாளர், திடீரென கால்பந்தாட்ட விதிமுறைகளுக்கு மாறாக பந்தினைக் கையில் எடுத்துக்கொண்டு எதிரணியின் 'கோல்' பகுதியை நோக்கி ஓடிச்சென்று பந்தினை அந்த கோலின் நடுவே வைத்துவிட்டார்.

அன்றைய காலகட்டத்தில் அந்த நிகழ்வு ஒரு போட்டியாளரின் தான்தோன்றித்தனமான செயலாக கருதப்பட்டாலும் றகர் போட்டிக்கான ஆரம்ப கருக்கட்டலாக அதுவே அமைந்ததாக கருதப்படுகின்றது. நாளடைவில் றகர் போட்டிகள் ஆரம்பமாகி அதற்கென்றே உருவாக்கப்பட்ட முதலாவது உலகக்கிண்ண றகர் போட்டிக்கு வழங்கப்பட்ட கிண்ணத்திற்கு 'வில்லியம் எலிஸ்' கிண்ணம் என்றே பெயரிடப்பட்டிருந்தது.

ஆரம்பகாலங்களில் கிரேக்க நாட்டிலும் றகர் போட்டியை ஒத்த போட்டிகள் விளையாடப்பட்டிருந்ததாகவும் ஒரு கருத்து நிலவுகின்றது. ஆனாலும், உத்தியோகபூர்வ ஆய்வுகளின்படியும் இணையத்தளத் தகவல்களின்படியும் 1823 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில்தான் றகர் போட்டிகள் அறிமுகமாகியதாக தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச றக்பி சம்மேளனம் (IRB) 1886 ஆம் ஆண்டில் அயர்லாந்தில்தான் ஏற்படுத்தப்பட்டது. அயர்லாந்தின் தலைநகரமான டப்ளினில்தான் அதன் தலைமையகம் செயற்பட்டது. தற்போது இந்த தலைமையகத்தில் 50 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் உள்ளதுடன் முழுமையான தொழில்சார் நிறுவனமாகவும் அது மாறியுள்ளது.

றக்பி போட்டிகளை மேம்படுத்தல், அபிவிருத்தியடையச் செய்தல் மேலும் அத்துறையை செவ்வனே நிர்வகித்தல் போன்ற பொறுப்புக்கள் சர்வதேச றக்பி சம்மேளனத்தின் வசமே உள்ளன. உலகக் கிண்ண றக்பி போட்டிகளுக்கான முழுமையான நிர்வாக ஏற்பாட்டு அதிகாரத்தையும் மேற்படி சம்மேளனமே கொண்டுள்ளது.



## பழைமைமிகு சங்கம்

இங்கிலாந்து றக்பி சம்மேளனமே உலகின் பழைமையான றக்பி சம்மேளனமாக கருதப்படுகின்றது. இதுவரை சர்வதேச றகர் சம்மேளனத்தில் 100 அணிகள் அங்கத்துவம் வகிக்கின்றன எனினும் இதில் 95 அணிகள் மாத்திரமே தரப்படுத்தல் பட்டியலுக்கு உட்படுத்தப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இதன்படி, சர்வதேச தரப்பட்டியலில் இலங்கை 53 ஆவது இடத்தை வகிக்கின்றது.

## இலங்கையில் றக்பி

இற்றைக்கு 131 வருடங்களுக்கு முன்னர் அதாவது, 1879 ஆம் ஆண்டில்தான் இலங்கையில் றகர் அறிமுகமாகியதாக கருதப்படுகின்றது. குறித்த வருடத்தில் ஜூன் மாதம் 28 ஆம் திகதியன்று இலங்கையில் சந்தித்துக்கொண்ட வெளிநாட்டவர்கள் 30 பேர் ஒன்றிணைந்து றக்பி சங்கமொன்றை அமைத்தனர். அதனைத் தொடர்ந்து இங்கிலாந்து றக்பி சங்க சட்டதிட்டங்களுக்கு அமைவாக இலங்கையில் றக்பி போட்டிகளை நடத்துவதற்கான ஒப்பந்தங்களைச் செய்தனர். குறித்த வருடத்தில் இலங்கையில் 3 றக்பி போட்டிகள் நடைபெற்றதாக குறிப்பிடப்படுகின்றது. 1908 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிதான் இலங்கையில் றக்பி சங்கம் அமைக்கப்பட்டது.

## விதிமுறைகள் 22

றகர் விளையாட்டில் 22 விதிமுறைகள் உள்ளன. இவை அனைத்தும் தனித்தனி தலைப்புக்களாக விவரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, ஓடிக்கொண்டு செல்லும் திசையில் உள்ள போட்டியாளரின் பின்புறத்தில் உள்ள போட்டியாளர்கள் மாத்திரமே பந்தினை கைமாற்றிக் கொண்டு செல்லமுடியும். ஆனாலும், பந்தினை உதைத்து விடுவதன் மூலம் தன்னைவிட கூடிய தூரத்திற்கு பந்தினை சென்றுவிடச் செய்யமுடியும்.

போட்டியானது 40 நிமிடங்கள் என்ற அடிப்படையில் இரண்டு பிரிவுகளில் நடைபெறும். புள்ளிகள் 4 வகைகளில் பெறமுடியும். கொண்டு செல்பவரின் முயற்சி, கோலில் அடித்தல், ட்ரொப்கோல், தண்டனை கோல் ஆகியன அந்த புள்ளியிடல் முறைகளாகும்

## றக்பி போட்டியின் அமைப்பு

### அணிக்கு 15 வீரர்கள் இடம்பெறுவர். போட்டிக்காலம் 80 நிமிடங்கள்

#### புள்ளிகள் பெறல்

முட்டை வடிவிலான பந்தினை எதிரணியின் கோல் எல்லையில் தரையில் வைப்பதன்மூலம் 'கோல் முயற்சி'யை பெறமுடியும்.

ஃபௌல் முறைகள், தண்டனை அடி, டிரொப் கோல் ஆகியன மூலமும் புள்ளிகளைப் பெறமுடியும்.

#### பிரதான நிபந்தனைகள்

ஓடிச்செல்லும் திசையில் பின்புறமாகவே பந்தினை எறியமுடியும்.

உதைத்தல் மூலமாக பந்தினை முன்னோக்கிச் செலுத்தமுடியும். விதிமுறைக்கு மாறாக அமைந்தால் எதிர்தரப்பிற்கு தண்டனைக் கோல் அடிக்க வாய்ப்பு வழங்கப்படும்.

#### புள்ளிகள் பெறும் விதம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செவ்வாய் செல்லத் தயார்...!



விண்வெளி ஆய்வு குறித்து பல்வேறு உலக நாடுகளும் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன. குறிப்பாக, சீனாவும் இந்தியாவும் நிலவுப்பயணத்தில் அதிக கவனம் செலுத்தி வருகின்ற அதேவேளை, அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் 'சிவப்புக் கிரகம்' என்று அழைக்கப்படும் செவ்வாய் கிரகத்தை ஆராய்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றன. இதில் அமெரிக்காவின் நாஸா ஆய்வு நிலையம் ஏற்கனவே செவ்வாய் கிரகத்துக்கு ஆய்வுக் கலங்களை அனுப்பியுள்ளது. இந்த கலங்கள் அங்கு பல்வேறு ஆய்வுகளை நடத்தி பல புதிய தகவல்களை புவிக்கு அனுப்பியவண்ணமே இருக்கின்றன.

இதன் அடுத்த கட்டமாக செவ்வாய் கிரகத்துக்கு விண்வெளி வீரர்களை அனுப்பி ஆய்வு செய்யப்போவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அந்த வகையில், இந்த பயணத்துக்கான வீரர்களை ஆயத்தப்படுத்தும் பணிகள் ரஷ்யாவில் உள்ள விண்வெளி ஆய்வு நிலையத்தில் நடந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பூமியில் இருந்து ரொக்கெட்டில் செவ்வாய் கிரகத்தை சென்றடைவதற்கு சுமார் 250 நாட்கள் எடுக்கின்றன. பின்னர் அங்கு 30 நாட்கள் வரை தங்கி இருந்தே ஆய்வுகளை நடத்தவேண்டி இருக்கும் என்றும் கூறப்படுகின்றது. ஆய்வுகளின் பின்னர் அங்கிருந்து புறப்பட்டு சுமார் 240 நாட்கள் பயணம் செய்தே பூமியை வந்தடையமுடியும். ஆக மொத்தம் சுமார் 520 நாட்கள் வரை பூமியை விட்டு விண்வெளியில் இருக்கவேண்டும். எனவே, இதை தாங்கும் அளவுக்கு விண்வெளி வீரர்களின் உடல் நிலை சிறப்பாக இருக்க வேண்டும். எனவே, அத்தகைய தகுதி உள்ளவர்களை தேர்வு செய்வதற்கான சோதனைகள் தற்போதளவில் நடைபெற்று வருகின்றன.

பல்வேறு உடல் தகுதி, கல்வித்தகுதி தேர்வுகளில் வெற்றி பெற்ற 11 பேர்களை தேர்ந்தெடுத்து, அவர்களை ஓர் அறையில் 520 நாட்கள் அடைத்து வைத்து சோதனை செய்யவும் திட்டமிட்டுள்ளனர். இந்த அறை ரொக்கெட்டில் இருப்பது போன்ற உணர்வை தரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. ரொக்கெட்டில் பயணம் செய்யும்போது இருக்கும் எடையற்ற தன்மையுடன் இந்த தங்கும் அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கி, அங்கு தங்கியிருந்து ஆய்வுகள் நடத்துவது போன்ற ஒத்திகை மற்றும் பயிற்சிகளும் இவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

ரஷ்யாவைச் சேர்ந்த 5 பொறியியலாளர்களும் 2 மருத்துவர்களும் பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா ஒரு விண்வெளி வீரரும் இந்த சோதனைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான தேர்வுகள் அடுத்த மாதம் தொடங்கி 520 நாட்களுக்கு நடைபெறும். இவர்கள் தங்கியிருக்கும்போது அவர்களது உடலில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணித்து ஆலோசனைகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# லேசர் மூலம் சூரிய ஒளியை சேகரித்து பூமிக்கு கொண்டுவரத் திட்டம்




பூமியின் சுற்றுவட்ட பாதையில் செய்மதிகளை அமைத்து சூரிய ஒளியை சேகரித்து, அதை இன்ஃப்ராரெட் லேசராக மாற்றி, பூமிக்கு கொண்டுவர விண்வெளி பொறியியலாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

ஐரோப்பாவின் மிகப்பெரிய விண்வெளி நிறுவனமான 'ஒஸ்ட்ரியம்' நிறுவனத்தின் தலைவர் மெத்யூ பெர்ரன் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்;

''தற்போது உலக அளவில் மின்சாரத் தேவை அதிகரித்துள்ளது. இதனை சமாளிப்பதற்காக அனல் மின்நிலையங்களையோ, அணு மின்நிலையங்களையோ அமைக்கலாம். ஆனால், அவை சுற்றுச்சூழலுக்கு பாரிய ஆபத்தாக அமைந்து விடுகின்றன. எனவே, சுற்றுச்சூழலைப் பாதிக்காத வகையில் மின்சாரம் பெறமுடியும் என்றால், அது காற்றாலை மூலமாகவோ சூரியசக்தி மூலமாகவோதான் முடியும். சூரிய ஒளியை பூமியில் சேகரித்தால் அதற்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படலாம். ஆனால், அதுவே விண்வெளியில் சேகரிக்கும்போது அதனை பெரும் அளவில் சேகரிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கும்'' என்றார்.

# இந்திய மாணவர்கள் உருவாக்கிய செயற்கைக்கோள்





இந்தியாவின் ஹைதராபாத் பொறியியல் கல்லூரி மாணவர்களின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ள Studsat (Student Satellite) செயற்கைக் கோள்,மே மாதம் 10 ஆம் திகதி விண்ணில் ஏவப்படவுள்ளது. பெங்களூர், ஹைதராபாத்தைச் சேர்ந்த 7 பொறியியல் கல்லூரிகளின் கூட்டு முயற்சியில் மாணவர்கள் பயன்பெறுவதற்காக இந்த செயற்கைக்கோளை மாணவர்கள் தயாரிப்பதற்கு இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) ஒத்துழைப்பை வழங்கியிருந்தது.

இதற்கான, 'நாஸ்ட்ராக்' செயற்கைக்கோள் தகவல் பரிமாற்ற மையத்தை இஸ்ரோ தலைவர் கே.ராதாகிருஷ்ணன் அண்மையில் திறந்து வைத்தார். இந்த மையமானது பூமியை சுற்றி வரும் 250 வர்த்தக செயற்கைக்கோள்களுடன் தகவல்களை பரிமாறிக்கொள்ளும் திறன்கொண்டது. மேலும், செயற்கைக்கோள்கள் அனுப்பும் தகவல்களை 'ஸ்டட்செட்' குழுவினர் பெற்றுக்கொள்ளவும் இந்த மையம் உதவுகின்றது. அத்துடன், இதனூடாக நாஸாவுடன் தொடர்புகொள்ளவும் முடியும்.

இந்த செயற்கைக்கோளில் 90 மீற்றர் தூரத்தில் உள்ள பொருட்களை தெளிவாகப் படம் பிடிக்கும் திறன் கொண்ட கெமரா பொருத்தப்பட்டுள்ளது. ஸ்டட்செட் ஆனது இஸ்ரோ தயாரித்துள்ள கார்டோசெட் செயற்கைக் கோளுடன் பூமியில் இருந்து 680 கி.மீ உயரத்தில் நிலை கொள்ளுமாறு சுற்றுப்பாதையில் செலுத்தப்படவுள்ளதோடு, இவை இரண்டும் PSLV & 16 ரொக்கெட் மூலம் மே மாதம் 10 ஆம் திகதி விண்ணில் ஏவப்படவுள்ளதாகவும் இஸ்ரோ அறிவித்துள்ளது.

# மூன்று விண்வெளி வீராங்கனைகளுடன் 'டிஸ்கவரி' பயணம்



அமெரிக்க விண்கலமான டிஸ்கவரி, இம்மாதம் 5 ஆம் திகதி ஏழு விண்வெளி வீரர்களுடன் 13



நாள் விண்வெளித் திட்டமொன்றுக்காக சர்வதேச விண்வெளி மையத்தை நோக்கிப் புறப்பட்டது. அதில் மூன்று விண்வெளி வீராங்கனைகளும் அடங்குகின்றனர்.

அமெரிக்க விண்கலமொன்று மூன்று வீராங்கனைகளுடன் விண்வெளி நோக்கிப் புறப்பட்டது இதுவே முதல் தடவையாகும். இவர்களில் ஒருவர் வொஷிங்டன் வன்கூவர் உயர்நிலைப் பாடசாலையில் அறிவியல் ஆசிரியராகவும் பணி புரிந்தவர். இன்னொருவர் மின் பொறியியலாளர், மற்றையவர் விண்வெளிப் பொறியியலாளர் ஆவார். இவர்களில் இருவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள். மற்றையவர் ஜப்பானியப் பெண் ஆவார்.

இதேவேளை, 'சோயுஸ்' என்ற விண்கலத்தில் இருந்தவாறு ரஷ்ய விண்வெளி வீராங்கனை ஒருவரும் பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.04.28 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 257**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## ஆறு வித்தியாசங்களில் √ அடையாளமிடுக






3


## பொருத்தமான எண்ணிக்கையுடன் இணைக்க

1





## அறிவுக்கு விருந்து 254 விடைகள்

**போட்டி: 02**




**போட்டி: 03**




**போட்டி: 04**




**போட்டி: 05**

1. ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல்; செய்கிறவனுக்குத் தலைச்சுமை.
2. காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்.
3. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
4. முன்கை நீண்டால் முழங்கை நீளும்.

## அற்லஸ் அறிவுக்கு விருந்து 254 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
கு.றேணுகா, தரம்-8[F],
யா/வேம்படி ம.உ.த.பாட.,
யாழ்ப்பாணம்.

**போட்டி: 02**
எம்.ஸஹாத், தரம் - 1[D],
புனித அந்தோனியார் ஆ.கல்., கண்டி.

**போட்டி: 03**
பா.மதுர்ஷன், தரம் - 5[A],
இறம்பைக்குளம் ம.ம.வித்., வவுனியா.

**போட்டி: 04**
அஷ்ஃபாக் அமீர், தரம் - 7[C],
மாளிகாஹேன மு.ம.வித்., பேருவளை.

**போட்டி: 05**
க.தாரணி, தரம் - 9[D],
விஜயரத்தினம் இ.ம.கல்., நீர்கொழும்பு.

## சரியான விடையின் கீழ் கீறிடுக

5

1. அவர்கள் நேற்று பாடசாலைக்குச் ................................
(செல்கின்றனர்/சென்றார்கள்)
2. ................................ மரத்திலுள்ள பழங்களைப் பறித்துச் சாப்பிட்டன.
(குரங்குகள்/குரங்கு)
3. மோசடிகளைக் கண்காணிப்பதற்காக குழுவொன்று ................................
(நியமிக்கப்பட்டனர்/நியமிக்கப்பட்டுள்ளது)

## புள்ளிகளினூடே சொற்களை எழுதுக

2




## கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை கட்டத்திலுள்ள எழுத்துக்களிடையே இனங்கண்டு, நிறந்தீட்டுக

4

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| X | Y | M | B | I | T | A | C | K | K | J |
| K | X | F | Y | O | F | A | S | O | K | D |
| S | X | T | M | T | T | C | B | M | W | H |
| R | R | A | N | A | T | B | S | P | K | H |
| H | T | O | T | C | D | W | L | Z | O | R |
| O | E | P | T | V | V | Z | O | P | I | F |
| R | K | E | M | C | S | G | J | N | D | N |
| S | S | E | C | Q | A | C | I | Z | L | W |
| E | A | H | C | F | X | R | B | K | Y | K |
| C | B | S | L | M | Q | X | T | L | R | A |

TOMATO
COW
TRACTOR
HORSE
SHEEP
BASKET
CAT



## பாராட்டுப் பெறுவோர்:

- எம்.நஸ்ஹான், தரம்-7[B],ப/அல்-முர்ஷித் மு.வித்., சில்மியாபுர.
- ஜெ.கீர்த்தனன், கண்டி வீதி, வவுனியா.
- எம்.பாரிக், தரம் - 9[B], அல்-அதான் ம.வித்., பதுளை.
- ஆர்.லிகா, தரம் - 2[A], நம்முவாவ மு.ம.வித்., நிகவரட்டிய.
- கு.கோபிகா, தரம்-4, மட்/துறைநீலாவனை மெதடிஸ்ட் மிஷன் த.க.பாட.,
- ஆர்.ஆக்கில் அஹமட், தரம்-3, அப்துல் ஹமீட் மு.வித்., இறத்தோட்டை.
- எல்.நிஃபாத், தரம் - 4[B], மாறை/மின்ஹாத் தே.பா., திக்வல்லை.
- கே.தினுக்சி பிரியங்கா, போறுவதண்ட, ஹொரண.
- எம்.ஹஸீஃப், தரம்-8[A], அல்/ஹிரா மு.ம.வித்., நாத்தாண்டியா.
- இனோச் ஷிம்ரொன், திருவள்ளுவர் த.வித்., பலாபத்வல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்மையைக் கண்டறிய சில வழிகள்

பொய் பேசுபவர்களோடு பழகவும் இணைந்து பணியாற்றவும் வாழவும் வேண்டிய சூழல் அநேகருக்கு நேரிடுகின்றது. பொய் பேசுபவர்களிடம் அகப்பட்டு பணத்தையும் பொருளையும் நிம்மதியையும் இழந்து திரியும் மக்கள் குறித்த செய்திகள் நாளேடுகளில் அடிக்கடி வெளிவருகின்றன. ஒருவர் பேசுவது பொய் என்பதைக் கண்டுபிடிக்க முடிந்தால் எப்படி இருக்கும்? அதொன்றும் பெரிய வித்தையில்லை என்கிறார் பல ஆண்டுகாலம் அமெரிக்க காவல் துறையில் பணியாற்றிய நியூபெர்ரி என்பவர். ஒருவர் பேசுவது பொய்யா? இல்லையா? என்பதைக் கண்டுபிடிக்க அவர் சில வழிமுறைகளைச் சொல்கிறார்.

1. முதலில் பேசுபவர்களின் வார்த்தைகளைக் கவனியுங்கள். அதில் இருக்கும் தொடர்பற்ற அல்லது இயற்கைக்கு முரணான செய்திகளை கவனமாகக் கண்டறியுங்கள். முக்கியமாக மனித இயல்புகளுக்கு மீறிய வார்த்தைகளையும் நடக்க சாத்தியமற்ற கூற்றுகளையும் கண்டறியுங்கள்.

2. உலகில் நான்கு சதவீத பொய்யர்கள் மிகத்திறமைசாலிகள். அவர்களிடம் மற்றவர்கள் எளிதில் மாட்டுவார்கள். பொய்யர்கள் என கருதும் நபர்களிடம் அவர்கள் எதிர்பார்க்காத ஒரு கேள்வியை எதிர்பார்க்காத நேரத்தில் கேளுங்கள். அவர்கள் பொய்யர்கள் என்றால் அந்த கேள்வியே அதைக்காட்டிக்கொடுத்து விடும்.

3. தெரிந்த நபர் எனில் அவருடைய இயல்புகளை வைத்து, அதில் தெரியும் மாற்றங்களை வைத்து அவரைக் கணக்கிடுங்கள். அமைதியான நபர் கலகலப்பாக இருப்பது போல் காட்டிக்கொள்வதும் கலகலப்பான நபர் சற்று அமைதியாய் இருப்பதும் நிகழ்ந்தால்



அதில் ஏதோ செய்தி இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

4. வெளிப்படுத்தும் உணர்வுகளை வைத்து எளிதில் இனம் கண்டுகொள்ளுங்கள். புன்னகையில் செயற்கை வாசமடிக்கின்றதா? நகைச்சுவை சொன்னால் உடனே சிரிக்காமல் இருக்கிறார்களா? உரையாடலில் தேவையான உணர்ச்சிகள் வெளிப்படாமல் இருக்கிறதா? இவையெல்லாம் பொய்யின் அறிகுறிகள்.

5. திடீர் உணர்ச்சிகளைக் கவனியுங்கள். பெரும்பாலானவர்கள் எதையேனும் மறைக்க முயன்றால் கணநேரத்தில் அவர்களுடைய கண்களில் குற்றம் தோன்றி மறையும். பெரும்பாலும் காவல் துறையில் இருக்கும் திறமையான நபர்களால் மட்டுமே அதைக் கண்டுபிடிக்க முடியும். எனினும், கவனத்தில் கொள்வது நல்லது.

6. "நான் நினைக்கிறேன்", நான் நம்புகிறேன்" போன்ற உரையாடல்கள் பல வேளைகளில் பொய்யைச் சொல்லப் பயன்படுத்தப்படும் வாக்கியங்கள். எனவே, சூழலுக்கு ஏற்றபடி இந்த வார்த்தைகள் சொல்லும் பொருள் என்னவாய் இருக்கும் என கணித்துக் கொள்ளுங்கள்.

7. முன்னுக்குப் பின் முரணான கருத்துக்கள் என்னென்ன என்பதைக் கவனியுங்கள். சிலர் இல்லை என்று சொல்லும்போது அவர்களுடைய உடலசைவு "ஆம்" என்று சொல்லும். சிலர் ஒரே செய்தியை வேறு விதமாய் கேட்கும்போது வேறு விதமாகப் பதிலளிப்பார்கள், அதை கவனியுங்கள்.

8. இயல்பாக இல்லாமல் இருக்கிறாரா என்பதையும் கவனியுங்கள். ஏதேனும் தவறு செய்துவிட்டவன் இயல்பாக இருப்பதாகக் காட்டிக் கொண்டாலும் இயல்பாக இருப்பதில்லை.


9. பேசும்போதெல்லாம் பொய்யே பேசுவார்கள் என்னும் எண்ணத்தோடு அணுகுதலும் தவறு. பொய் பேசுகிறார்கள் எனில், பேசுவது அனைத்தும் பொய் என முடிவு செய்தலும் தவறு. ஒரு பொய் சொல்லப்பட்டு அதைக் கண்டுணர்ந்தால் அதன் காரணத்தை அறிய முயலுங்கள். மேற்கூறிய, செய்திகளெல்லாம் பொய்களைக் கண்டறிய நிரூபிக்கப்பட்ட உண்மைகள் என்பது குறிப்பிடத்தக்கது.எனினும், குடும்ப உறவுகள் சார்ந்த சிக்கல்களில் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதை விடுத்து, நம்பிக்கைக் கரம் கொண்டு அரவணைத்து நடப்பதே ஆரோக்கியமானதாகும்.

**ஜெ.டிசோகுமார்**

யாழ்ப்பாணம்



# குவாலியர் கோட்டை



வரலாற்றின் பல்வேறு ஏற்ற இறக்கங்களைப் பார்த்துள்ளது மத்திய பிரதேசத்தில் உள்ள குவாலியர் கோட்டை. மலையொன்றின் உச்சியில் கம்பீரமாக எழுந்து நிற்கும் இந்தக் கோட்டையில் இருந்து குவாலியர் நகரத்தின் அழகான காட்சிகளைக் காணலாம்.

இக்கோட்டையை 15 ஆம் நூற்றாண்டின் ராஜா மான் சிங் டோமர் என்பவர் கட்டினார்.

அன்றுமுதல் இக்கோட்டை மொகலாயர்கள், மராட்டியர்கள், ஆங்கிலேயர்கள் என்று பலரது கைமாறி வந்துள்ளது. இறுதியாக சிந்தியா வம்சத்தினரிடம் குவாலியர் கோட்டை ஒப்படைக்கப்பட்டது.

குவாலியர் கோட்டையில் புகழ்பெற்ற 'சிந்தியா' பள்ளி நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான இந்த உறைவிடப் பள்ளியை நூற்றாண்டுகளுக்கு முன்பு முன்னாள் குவாலியர் மகாராஜா தொடக்கி வைத்தார்.

குவாலியர் கோட்டைக்குள் மூன்று அழகான கோவில்களும் அமைந்துள்ளன. அவற்றில் நுணுக்கமான வேலைப்பாடுகள் அமைந்த 11 ஆம் நூற்றாண்டு 'சாஸ் பாகு' கோவில் குறிப்பிடத்தக்கதாகும். 'சகாஸ்ட்ரபாகு' என்று அழைக்கப்படும் ஆயிரம் கைகள் கொண்ட விஷ்ணுவுக்காக கட்டப்பட்டது இக்கோவில். ஆனால், காலப்போக்கில் இதன் பெயர் 'சாஸ் பாகு' என்று சுருங்கிவிட்டது. அது இந்தியில் 'மாமியார்-மருமகள்' எனப் பொருள்படும் என்பதால் 'மாமியார்-மருமகளுக்கு' கட்டிய கோவில் இது என்று மக்கள் கருதுகின்றனர்.

இப்பகுதியின் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம், மலையடி வாரத்தில் செதுக்கப்பட்டுள்ள ஜைன தீர்த்தக்கரர்களின் சிலைகள். அவற்றில் ஒன்றின் உயரம் 19 மீற்றராகும்.



# செயின்ட் ஜோன் தேவாலயம்

தாஜ்மகாலைக் கட்டி முடிக்க 17 ஆண்டுகள் ஆயின. அங்கோர்வார் கோயிலைக் கட்ட 30 ஆண்டுகள் ஆயின. நியூயோர்க்கில் உள்ள ஒரு தேவாலயம் 1892 ஆம் ஆண்டு தொடங்கி 100 ஆண்டுகளுக்கு மேலாக இன்றுவரை கட்டப்பட்டு வருகிறது.

உலகிலேயே பெரிய தேவாலயமான இதற்கு, புனிதர் ஜோனின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது இரண்டு கால்பந்து களங்களுக்கு இணையான நீளம் கொண்டுள்ளது.



இதன் உச்ச விதானத்தின் உயரம் 37.7 மீற்றர்கள் ஆகும். இதற்குக் கீழே, அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலையை மிக எளிதாக வைக்கலாம்.

இந்தத் தேவாலயத்தில் மிகப்பெரிய, அற்புதமான வண்ண ஜன்னல் கண்ணாடிகள் அமைந்துள்ளன. இத்தேவாலயத்தின் 'கிரேட் ரோஸ்' ஜன்னல், 12 மீற்றர் நீளம் கொண்டது. அமெரிக்காவிலேயே பெரியதான இந்த ஜன்னலில் 10 ஆயிரம் கண்ணாடிகள் பொருத்தப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் பல்வேறு இன மக்களைக் கருத்தில்கொண்டு, இந்தத் தேவாலயத்தில் வெவ்வேறு மொழி பேசும் மக்களுக்காக ஏழு தனித்தனியான பிரார்த்தனைப் பகுதிகள் அமைந்துள்ளன.

மனிதகுலத்தின் மாபெரும் மனிதர்களான மகாத்மா, சார்ல்மாக்னே, கொலம்பஸ், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் ஆகியோரைப் போற்றும் வகையில் அவர்களது சிலைகள் பலிபீடத்தின் அருகே அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பரிமாண (3D) தொலைக்காட்சி - பத்திரிகை அறிமுகம்


LA DERNIERE HEURE LES SPORTS
Silvio Proto, blessé, peut-être forfait contre le Standard!
EXCLUSIF
LA MAMAN DE JOE LANCE UN APPEL AUX BELGES!
Françoise Van Holsbeeck, marquée par le chagrin, parle pour la première fois
Alejandro Valverde, un grand d'Espagne, remporte la Flèche Wallonne
Tom Cruise papa d'une petite fille

உலகப் புகழ்பெற்ற சோனி நிறுவனம் புதிய தொலைக்காட்சியொன்றை சந்தையில் அறிமுகம் செய்யவுள்ளது. முப்பரிமாணம் எனப்படும் 3D தன்மையைக் கொண்டதே இந்த தொலைக்காட்சியின் சிறப்பம்சமாகும்.

முப்பரிமாணம் மிக்க 3D காட்சிகளை பார்க்கும்போது அதில் தோன்றும் கதாபாத்திரங்கள் திரையிலிருந்து வெளியே வந்து நமது அருகேயே நிஜமாக இருப்பதைப் போன்ற உணர்வைக் கொடுக்கும். அது உண்மையில் மிகவும் மெய்சிலிர்க்கச் செய்யும் அனுபவம்தான்.

இலத்திரனியல் உலகில் பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்ற 'சோனி' நிறுவனம் இத்தகைய 3D தொலைக்காட்சியை உருவாக்கியிருப்பதும் ஒரு திருப்பு முனையாகவே கருதப்படுகின்றது. மேற்படி, புதுவகைத் தொலைக்காட்சியானது முதன்முதலாக ஜப்பான் சந்தையில் எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி அறிமுகம் செய்யப்படவுள்ளது. இத்தகைய தொலைக்காட்சியொன்றின் விலை 3,535 இ.டொலர்களாகும். இந்த தொலைக்காட்சித் திரையானது 46 அங்குலம் அகலத்தைக் கொண்டிருக்கும்.

இதற்கு முன்னர் முப்பரிமாண 3D தொலைக்காட்சிகள் இல்லாதிருந்த போதிலும், 3D திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. இவ்வாறான 3D காட்சிகளைப் பார்க்கையில் அதற்காகவே தயாரிக்கப்பட்ட விசேட மூக்குக் கண்ணாடியொன்றை அணிதல் வேண்டும். அந்தவகையில், தற்போது அறிமுகமாகியுள்ள 3D தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கும் மேற்படி 3D கண்ணாடியை அணிதல் வேண்டும். வீட்டிலிருந்தவாறே தொலைக்காட்சியைப் பார்க்கையில் குறித்த 3D கண்ணாடியை அணிந்தவாறு பார்த்தால் முப்பரிமாண வடிவில் அதன் காட்சிகளை புதிய அனுபவத்துடன் பார்க்கலாம்.

'சோனி' நிறுவனத்தின் கருத்தின்படி, இந்த புதிய முப்பரிமாண தொலைக்காட்சியை அறிமுகப்படுத்தி 2011 ஆம் ஆண்டை அடைகையில் பெருமளவு லாபத்தை ஈட்டமுடியும் என்று தெரிவித்துள்ளது.





## 3D பத்திரிகை

தொலைக்காட்சி மட்டுமல்ல 3D அமைப்பில் செய்திகளை அறியக்கூடிய வகையிலான செய்திப் பத்திரிகையொன்றும் அறிமுகமாகியுள்ளது. பெல்ஜியம் நாட்டிலேயே இந்தப் பத்திரிகை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

'லா தொனியே ஹுரே' என்ற பத்திரிகையே இவ்வாறு முப்பரிமாண வடிவத்தைக் கொண்ட பத்திரிகையாக வெளியாகியுள்ளது. இந்த பத்திரிகை சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட சிறப்பிதழ் ஒன்றையே மேற்படி முப்பரிமாண வடிவில் அமைத்திருந்தது. வாசகர்களுக்கும்கூட அது புதியதோர் அனுபவமாகவே இருந்தது. இருப்பினும், இந்தப் பத்திரிகையில் விளம்பரங்கள், புகைப்படங்களை மாத்திரமே முப்பரிமாண வடிவில் பார்க்கமுடியும். இதற்காக விசேட 3D மூக்குக் கண்ணாடியொன்றும் வாசகர்களுக்கு இலவச இணைப்பாக வழங்கப்படுகின்றது.

பிரெஞ்ச் மொழியில் வெளிவருகின்ற இப்பத்திரிகை ஆசிரியரின் கருத்தின்படி, இதுவொரு பரீட்சார்த்த முயற்சியாகவே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் முழுப் பத்திரிகையையும் இவ்வாறு முப்பரிமாண 3D பத்திரிகையாக வெளியிட உத்தேசித்திருப்பதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 21, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org